REGD 4642 M

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7.
½ „ 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 11—12—49 | இதழ் 24

## எல்லாம் எட்டில்தான்!



தேர்தல் நெருங்கிவிட்டதல்லவா! ஆட்சிப்பீடம் ஏறிய ஆளவந்தார்கள் என்னென்ன 'நன்மைகளை'ச் செய்துள்ளார்கள், இதுவரை, என்று "விளக்கி" அ. இ. காங்கிரஸ் ஒரு வெளியீடு பிரசுரித்திருக்கிறதாம்! காங்கிரஸ் ஆட்சியில், மக்கள் நன்மைகளை எதிர்பார்த்தனர். ஆனால் கிடைத்தது? கிடைப்பது? எல்லாம் எட்டில்தான்! என்பதை விளக்க, 'பிளிட்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள படம்தான் இது.

# மஞ்சள் ★ ★ ஏகாதிபத்யம்!

ஏழை எப்படி வாழமுடியும்? அவனுடைய நன்மைக்கா, வரிப் பணம் செலவிடப்படுகிறது? கொட்டிக் கருகிறான் வரிப்பணம், கேட்ட போதெல்லாம், கேட்கிற அளவுக்கு. பகல்பட்டினி—இராப்பட்டினி—அன்றாடம் காய்ச்சி—அரை வயித்துக்கு ஆலாய்ப் பறப்பவன்—என்று இவ்விதமாக இழிநிலையில் ஏழை இருக்கிறான்.

அவன் தருகிற வரிப்பணமோ, சர்க்கார் செலவுக்கே, முக்கால் பாகத்துக்கு மேல சரியாகப் போய் விடுகிறது.

நெல்லுக்கு நீர் பாய்ச்சுகிறான்—புல்லுக்குத்தான் பயன் படுகிறது! கம்பளி கிடைக்குமென்று, ஆடுகளை வளர்க்கிறான் — ஓநாய்கள் கொழுக்கின்றன, ஆடுகளைக் கொன்றுதின்று! மரம் பழுக்கிறது — வௌவாலுக்கு விருந்து — தோட்டக்காரன், பழம் இருந்த இடத்தைப் பார்த்துப் பார்த்து ஏங்குகிறான்.

ஏழையும் அப்படித்தான், சர்க்காருக்கு நாம் வரிமேல் வரிகொடுத்த வண்ணம் இருக்கிறோம், அந்தப் பணத்தைக் கொண்டு, நமக்குத் தேவையான நன்மைகளைச் செய்து தரும் என்று நம்புகிறான்—சர்க்காரோ, முக்கால் பாகம், சர்க்காரின் நிர்வாகத்துக்காக உள்ள, அதிகாரிகளுக்குச் சம்பளமாகக் கொடுத்து விட்டு, மிச்சம் மீதியை வைத்துக் கொண்டு, பொதுமக்களின் நன்மையைச் செய்வதாகக் கூறுகிறது. வரிப்பணத்திலே பெரும் பகுதி கர்னல், கவர்னர், கலக்டர், மானேஜர், என்று இப்படி உள்ள பண விழுங்கிகளுக்கே சரியாகிவிடுகிறது—ஏழையை வாழவைக்கப் பணம் ஏது இந்தச் சர்க்காரிடம்! ஏழை வாழவேண்டுமானால், அவன் தருகிற வரிப்பணம், இப்படிப் பாழாகிற திட்டம் ஒழிய வேண்டும்.

கொள்ளைச் சம்பளத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கும் கொடுமை ஒழிக்கப்பட வேண்டும்.

எவ்வளவு அதிகாரிகள்! எதெதற்கு அதிகாரிகள்! கும்பல் கும்பலாகக் கூடிக்கொண்டு, ஏழையின் பணத்தைத் தின்று ஏப்பமிடுகிறார்கள்; இவ்வளவு 'அதிகாரிகள்' ஏன்? அதிகார வர்க்கத்தின், தொகை குறையவேண்டும்—சம்பளச் செலவு, மிகவும் குறைக்கப்பட வேண்டும்.

'நம்ம சர்க்கார்' ஏற்பட்டால் 'சம்பளச் செலவு' இவ்வளவு இருக்க விடுவோமா! இவ்வளவு அதிகாரக் கும்பல் கொட்டமடிக்கப் பார்த்துக் கொண்டிருப்போமா?

நிலத்துக்கு ஒரு அதிகாரி! அதற்கு நீர்ப்பாய்ச்சனத்துக்காக ஒரு அதிகாரி! ஆறுகுளத்துக்கு ஒரு அதிகாரி! அவைகளிலே ஓடும் மீனுக்கு ஒரு அதிகாரி. காட்டுக்கு ஒரு அதிகாரி, என்று இப்படி கண்டதற்கெல்லாம், அதிகாரிகளை நியமித்து, சம்பளத்தைக் கொள்ளை கொள்ளையாகக் கொடுத்து, ஏழையைப் பாழாக்குகிறது இந்தச் சர்க்கார். வெள்ளைக்காரச்சர்க்கார் என்று இதற்குப் பெயராம்! கொள்ளைக்கார சர்க்கார் என்ற பெயரல்லவா, பொருத்தமானது!

*   *   *

ஏழை மகிழ்ந்தான்! வாழ்வளிக்கும் திட்டம் அறிந்துரைக்கிறார் இந்தத் தலைவர், இவர் வாழ்க!—என்று வாழ்த்தினான். ஊரெங்கும் இதே பேச்சு—உத்யோக மண்டலம், பணத்தைத் தின்று விடுகிறது—அளவுக்கு அதிகமான, செலவு செய்யப்படுகிறது அதிகாரிகளுக்கு—தொகையும் அதிகம், தரப்படும் பணமும் அதிகம் — வேலைக்காக 'ஆள்' நியமிக்கப்படுவதில்லை—'ஆளுக்காக' வேலைகளைப் புதிது புதிதாக உண்டாக்குகிறார்கள்—இந்த வீண் செலவினால்தான், ஏழைக்கு, வரிப்பளுவு ஏறுகிறது, வாழ்வு வளைகிறது—என்று, முதலில் பேசினர்—பிறகு ஏசினர் இந்த முறையை மாற்றி அமைக்கும் நோக்கமும் திறமும் கொண்டவர்களை, ஆட்சியில் இருக்கச் செய்யவேண்டும் என்று பொதுமக்கள் தீர்மானித்தனர் — காங்கிரசாட்சியும் ஏற்பட்டது.

*   *   *

மேடைகளில் கிளம்பிய முழக்கம் போலவே, ஏடுகளிலும்! உள்நாட்டிலே உள்ளவர்க்கு அறிவிக்கும்விதமாக மட்டுமல்ல, வெளி உலகுக்குத் தெரிவிக்கும் முறையிலே, தலையங்கங்கள் தீட்டப்பட்டன. ஏழை இந்தியாவில், அதிகார வர்க்கம் கொழுக்கிறது என்று தீட்டுவார் ஓர் ஆசிரியர். யானையைக் கட்டித் தீனிபோட யாரால் முடியும்—என்று நகைச்சுவையைக் கலந்து எழுதுவார் இன்னோர் ஆசிரியர். டில்லி தேவதைகள்! அதிகார பூதங்கள்! — என்று இடிமொழிகளைத் தீட்டுவார் வேறோர் ஆசிரியர். நாள்தோறும் கிளம்பும் இந்தப் பிரச்சாரக் குண்டு! நாடு, அதிரும்!! வெளி உலகும் இதுகேட்டு, இப்படியுமா அக்ரமம் நடக்கிறது என்று வியப்புறும்!

*   *   *

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் பெரும் பிழைகளிலே, மிக முக்கியமானது, அதிகாரவர்க்கத்தை வேண்டுமென்றே வளரச் செய்தது—கொழுக்கவைத்தது! — என்ற பலமான குற்றச்சாட்டு எங்கும் பரவிற்று! சொந்த ஆட்சி அமைந்தால், இந்த 'அக்ரமம்' இராது—அதிகார வர்க்கத்தின் கொட்டம் அடக்கப்படும்—செலவு மட்டுப்படுத்தப்படும்—உடல் நலத்துக்கும் ஊர் நலனுக்கும், அறிவு பெருக்கவும் சீரமைப்புக்கும் பணம் கிடைக்கும், என்று மக்கள் நம்பினர்—அந்த நம்பிக்கை எனும் படிமூலம், ஆட்சிப்பீடம் ஏறினர், காங்கிரஸ் கட்சியினர்; அவர்களின் காரியம் முடிந்தது; அவர்கள் எதிர்பார்த்தது நடந்தேறியது

ஆனால், பொதுமக்களின் நிலைஎன்ன? பொதுமக்கள், எதிர்பார்த்தது கிடைத்ததா? வெள்ளைக்கார ஆட்சியின்போது இருந்த, 'வீண்செலவு' குறைக்கப்பட்டதா? அதிகாரவர்க்கத்தின்தொகை குறைக்கப்பட்டதா? ஏழை, ஆயாசம்தீர்ந்து, நிம்மதிபெற முடிந்ததா?

• • •

வெள்ளைக்கார ஆட்சியைக் கொள்ளைக்கார ஆட்சி என்று பொதுமக்கள், கருதியதற்குக் காரணம், — ஒன்று இந்தஅதிகாரவர்க்கச்செலவு, மற்றொன்று பட்டாளச் செலவு. காங்கிரஸ் 'பிரசங்கி' கனல் மூட்டும் விதமாகப் பேசுவதற்காக, வரிப்பணத்திலே, முக்கால்வாசி, உத்யோகஸ்தர்களுக்குச் செலவாகி விடுகிறது, என்று பேசினார் — செலவு அதிகம் தான்—ஆனால், முக்கால்வாசியல்ல! ஒரு ஏழை நாடு, தாங்க முடியாத அளவு, செலவாயிற்று; இந்தக் குற்றம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இழைத்தது—இந்தியாவின் பொருளாதார நிலைக்கான புள்ளி விவரத்தையும் எடுத்துக்காட்டி, அதிகாரவர்க்கத்துக்காகச் செலவிடப்பட்ட தொகையின் புள்ளிவிவரத்தையும்எடுத்துக் காட்டியபோது, வெளிஉலக, நல்லறிவாளர்கள், உண்மையிலேயே, உளம் நொந்தனர், பிரிட்டிஷ் ஆட்சியைக் கண்டிக்கவும் செய்தனர்.

* * *

சீமான் வீட்டிலே, குழந்தைக்குப் பெயரிடும் விழாவுக்கு, திருவாவடுதுறை ராஜரத்தினத்தின், நாயனக் கச்சேரியை, வைக்க முடியும் — அவருக்குச் சிரமம் இல்லை. ஏழைவீட்டிலே, முடியுமா ராஜரத்தினத்தின் நாயன 'பிளேட்' கிடைத்து, அதைப்போட்டாலே, பிரமாதம் — அதுவே சிரமம்! அதுபோலத்தான், தொழில் ஓங்கி, செல்வம் கொழித்துள்ள நாடுகளிலே, நிர்வாகத்துக்காகச் செலவிடப்படும் தொகை, அதிகமாகத்தான் இருக்கும் — இருப்பினும், நாடு, தாங்கிக் கொள்ளும். இந்தியாவின் ஏழ்மை, உலகறிந்த உண்மை! எனவே, அங்கு மற்றநாட்டுச் செலவுபோல, நிர்வாகத்துக்குச் செலவிடுவது, அக்ரமம் — ஏழையைக் கெடுக்கும் காரியம். எனவேதான், வெள்ளை ஏகாதிபத்தியம் கண்டிக்கப்பட்டது— மஞ்சள் ஏகாதிபத்யம் மலர்ந்தது! இந்தப் புதிய ஆட்சியிலே, பழையநோய் நீக்கப்பட்டதா? இல்லை! இல்லை! நோய் நீக்கப்படாததுமட்டுமல்ல — வளருகிறது—வளருவதுமட்டுமல்ல, பழைய ஏகாதிபத்யம் கேலி செய்யும் அளவுக்கு வளர்ந்துகொண்டு வருகிறது.

• • •

சர்க்காரின் நிர்வாகச் செலவுதான், இந்தியப் பொருளாதாரத்தின் 'மென்னியைப்' பிடித்து அழுத்துகிறது.

அதிகாரம், (அன்னியரிடமிருந்து) இந்தியரிடம் தரப்பட்ட பிறகு, அதிகாரவர்க்கம் அதிகமாக வளர்ந்து விட்டது.

இப்போதுள்ள அதிகாரிகளின் தொகையில் மூன்றிலோர் பகுதியைத் தாராளமாகக் குறைக்கலாம்.

இந்தியாவின் வாழ்க்கைத்தரமோ, மிகவும், குறைவான அளவுள்ளது.

இதைக் கவனிக்கும்போது, அதிகாரவர்க்கத்துக்காகச் செலவிடப்படும் தொகை, மிக மிக அதிகம் என்பது புலப்படும்.

இந்தியாவின் பட்டாளச்செலவை ஐரோப்பிய நாடுகளிலே, செலவிடப்படும் அளவுக்காவது, குறைத்தால் நல்லது.

* * *

புதிய ஆட்சியைப்பற்றிய கண்டனம் இது.

அதிகாரவர்க்கத்தின் செலவைக் குறைப்பதாக வாக்களித்தவர்கள், அதிகாரவர்க்கத்தின் தொகையை அதிகப்படுத்திவிட்டார்கள்!

பட்டாளச் செலவைக் குறைத்து, பணம் பாழாவதைத்தடுத்து, பொதுமக்களுக்குப் பலன் தரும் திட்டம் வகுப்பதாகக்கூறிப் பட்டம் கட்டிக்கொண்டவர்கள், பட்டாளச்செலவை அதிகமாக்கிவிட்டனர் — பயப்படும் அளவுக்கு!!

ஏழை என்ன செய்ய முடியும்? அவன் எதிர்பார்த்தது என்ன, கிடைத்தது என்ன? உன் வாழ்வு வளையும்படியான பெரும் பாரத்தைச் சுமக்கிறாய், உழைப்பாளியே! உத்தமனே! ஊராள்வோன் அன்னியன், உன் நன்மையைக் கவனிக்க மாட்டான்—அவன் ஆட்சி ஒழிந்தால், உன் கஷ்டம் தீரும், என்று பேசிப் பதவிக்கு வந்தவர்கள், சுமையை இறக்காததுமட்டுமல்ல, மேலும் பளுவை ஏற்றுகிறார்கள்! அதிகாரவர்க்கத்தின் அளவு அதிகரித்துவிட்டது! செலவு அதிகமாகிவிட்டது! பட்டாளச்செலவும் பலமடங்கு அதிகமாக்கப்பட்டுவிட்டது!

நாடு தாங்காது! ஏழை வாழ முடியாது!

வீண்செலவு வளருகிறது! வாழ்வு வளைகிறது! ஏழை, அழுகிறான்.

ஏகாதிபத்யம் இறுமாந்திருக்கிறது!—என்று முன்பு குற்றம் சாட்டிய குணாளர்கள் ஆட்சியிலே, அதே குற்றத்தைத் துணிவுடன், அதிக அளவிலே செய்யப்படுகிறது. கேலியும் கண்டனமும், எச்சரிக்கையும் கிளம்பி விட்டது, ஆளவந்தார்களின் போக்குப்பற்றி. எங்கிருந்து? அதுதான், வேடிக்கை—வேதனைக்கிடையே உள்ள வேடிக்கை! எந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின், செலவு முறையை, அதிகார வர்க்கத்தைக் கொழுக்கச் செய்யும் அக்ரமத்தைக் கண்டித்தார்களோ, இந்த ஆளவந்தார்கள், அதே ஏகாதிபத்திய நாட்டிலே இருந்து வெளிவரும், "எகானமிஸ்ட்" எனும்நுண்ணறிவு படைத்த ஏடு, கண்டிக்கிறது, மஞ்சள் ஏகாதிபத்யத்தை! மதுவிலக்குப் பிரசாரகர், அதிகக் குடியால், வாந்தி எடுக்கும்போது, மாஜி குடிகாரர் புத்தி கூறுவதைப் போன்ற வேடிக்கை இது! ஏகானமிஸ்ட் எனும் ஆங்கில ஏடு—பொறுப்பற்ற பத்திரிகை அல்ல. விடுகதையும் போட்டிப் பரிசும், விளம்பரக் குவியலும் கொண்ட ஏடல்ல. ஆட்சிமன்றங்கள் பலவற்றிலே உள்ள நிபுணர்கள் போற்றிப் படிக்கும், ஏடு. பொருளாதார நிலைமைகளைக் கண்டறியும் இதழ்; அந்த ஏடு, கண்டிக்கிறது, தேவையற்ற, தாங்க முடியாத, செலவு செய்கிறது இந்திய சர்க்கார்—இது கூடாது—நல்லதல்ல, என்று எச்சரிக்கிறது! இந்தப் பூணாரம்பூண்டு கொள்ள வேண்டிய நிலைமைக்கு வந்திருக்கின்றனர், புதிய ஆட்சியினர்! எவ்வளவு கேவலமான நிலைமை!! வெள்ளையர் நாட்டு ஏடு பார்த்துக்கண்டிக்கும் அளவுக்குக் கண்மூடித்தனமான போக்கிலேயா செல்வது! "எகானமிஸ்ட்" இதழின் கண்டனக் குறிப்புகளைத்தான், நாம் இக்கட்டுரையில், பொறுக்கெழுத்திலே பொறித்துக்

காட்டியிருக்கிறோம் "வெள்ளையனே! உன் ஆட்சிக்காலத்திலே, பணம், வீணாக அதிகார வர்க்கத்துக்கும் பட்டாளத்துக்கும் பாழாக்கப்பட்டு, ஏழைக்குப் பயன்படாமல் இருந்ததே, பார், அந்த நிலையை மாற்றி விட்டோம், நிர்வாகச் செலவைக் குறைத்து விட்டோம், பட்டாளத்துச்செலவைக்குறைத்து விட்டோம், ஏழையை வாழவைக்க, பெரும் தொகையைச் செலவிடுகிறோம், இஃதன்றோ நல்லாட்சி" என்று பெருமிதத்துடன் நாம் கேட்க வேண்டியது போய், "எகானமிஸ்ட்" இடித்துக் கேட்கிறது, "இப்படியா கண்மூடித்தனமாகப் பணத்தை வீணாக்குவது—ஆட்சியிலே அமர்ந்ததும், அதிகாரிகளின் தொகையை மனம்போன போக்கிலே வளரச்செய்து விட்டீர்களே! ஐரோப்பிய நாடுகளிலே ஏற்படுவதை விட அதிகச் செலவு செய்கிறீர்களே பட்டாளத்துக்கு!!" என்று கேட்கிறது!

மதுவிலக்குப் பிரசாரம் புரியவந்த மகானுபாவரே! இப்படியா, 'மண் அளக்கும்' நிலை வருகிறபடி குடிப்பது—என்று மாஜிகுடிகாரர் கூறிடக் கேட்டால், மதுவிலக்குப் பிரசாரகர் எவ்வளவு வெட்கப்படவேண்டும்! வேதனைப்பட வேண்டும்! அதைவிட அதிகமான வெட்கமும் வேதனையும் பிறக்கும்விதமாக எகானமிஸ்ட் எனும் இதழ் டில்லியும் எதிர்காலமும் என்ற தலைப்பிட்டுத்தீட்டியிருக்கிறது. கண்டனத்தோடு விடவில்லை, பயமூட்டியுமிருக்கிறது எகானமிஸ்ட். இவ்விதமாக உமது போக்கு இருந்தால், அமெரிக்க உதவிகிடைப்பது சிரமந்தான்!—என்றும் மிரட்டுகிறது.

ஏழையின் கண்ணீருக்கே பயப்படாத ஆளவந்தார்கள், இந்த ஏசலுரைக்கா பயப்படப் போகிறார்கள்! ஆனால், நாட்டின் எதிர்காலத்தில் அக்கறை கொண்டவர்களனைவரும், எகனாமிஸ்ட், கண்டிக்கும் அளவுக்குக் கண்மூடித்தனமாக நடந்துகொள்ளும் கட்சியிடம், நாடு சிக்கிக்கிடக்கிறதே என்பதை எண்ணும்போது, உண்மையில் பயப்படத்தான் செய்வார்கள்! எலி பிடிக்கப் பூனையை வளர்க்க, அது, குழந்தைக்காகவைத்திருந்த பாலைக் குடித்துவிட்டுத் தூங்கும் கதை போலாகிவிட்டது, ஆளும் கட்சியின், போக்கு.

*

## மூடுவிழா நடக்கிறது!

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை சர்க்கார் கோரியவைகளைச் செய்து தராமலா போகப் போகிறது என்றே எவரும் கருதினர்.

தேக்கும், சந்தனமும் சென்னை மாகாணத்தின் சிறப்புப் பொருள்கள். எனவே, மாகாண சர்க்கார் தன் மாகாண நலனை மனதில்வைத்து விடுத்த வேண்டுகோளை, மத்திய சர்க்கார் கவனிக்காமலா விட்டுவிடும்! அதுவும் மாகாணத்துக்குரிய கல்லூரியைத் தன் வசப்படுத்திக்கொண்ட மத்திய சர்க்காரா, புறக்கணித்து விடும்! என்றுதான், எல்லோரும் கருதினர்.

ஆனால், எதிர்பார்த்தது எதுவும் நடக்கவில்லை! நம்பிக்கைகள் நாசமாயின! அதுமட்டுமல்ல, இருந்ததற்கும் 'மூடுவிழா' நடத்தப்பட்டுவிட்டது—மேன்மை தங்கிய டெல்லி சர்க்காரால்!

கல்லூரியில் ஒரு பகுதியாக இருந்த அதிகாரிகள் பயிற்சிப் பகுதியை, மூடிவிடுவதென்று மத்திய சர்க்கார் முடிவு செய்துவிட்டார்கள். மாகாணத்துக்கு, எவ்வளவு முக்கியமானது இக்கல்லூரி, இதை விரிவு படுத்தவேண்டியதை விட்டு, இருக்கும் வகுப்புகளையும் எடுக்கலாமா, என்பது டெல்லியார் உள்ளத்தில் படவில்லை!

எப்படித் தென்படமுடியும்! எங்கோ இருக்கும், அவர்களுக்கு, இம் மாகாணத்தின் அருமை பெருமை எப்படித் தெரியும்! கல்லூரியின், முக்கிய பகுதியொன்றை மும்முரமாக "மூடுவிழா" நடத்திவிட்டார்கள்!

கல்லூரியை, மாகாணசர்க்காரிடமிருந்து, மத்திய சர்க்கார் எடுத்து நிர்வகிக்கும் படியான, அளவு அவசியம் என்ன ஏற்பட்டது என்பதும், இவர்கள் ஏன் அதை அவர்களிடம் ஒப்புவிக்கவேண்டும் என்பதும், யாருக்கும் விளக்கப்படவில்லை, கடந்தஆண்டு! அவ்வளவு தேசிய சேவையைச் செய்தார்கள், மாகாண சர்க்கார். ஆனால் இப்போதோ, மத்திய சர்க்கார் மாகாணத்தின் முகத்திலறைந்தது போல், மாகாண சர்க்காரின் வேண்டுகோள்படி கல்லூரியை விரிவுபடுத்தவில்லை! இருந்த வகுப்பையும் எடுத்து விட்டது!

அகிலும் தேக்கும் அழியாக்குன்றம், அடங்கியது நமது மாகாணம். அவைகளைக் காப்பாற்றி, வளர்க்க வேண்டியது நமது கடன். அதை, மத்தியசர்க்காரிடம் ஒப்புவித்திருக்கிறது மாகாண அரசாங்கம்!

மத்திய அரசாங்கத்துக்கோ, ஒரு மாகாணத்திலிருக்கும் காடுகளைக் காப்பாற்றவேண்டுவதற்கான காரியங்களைச் செய்யும் அவசியம் தென்பட வில்லை!

பின்லாந்தில் கிடைக்குமா இந்தியாவுக்கு வேண்டிய மரங்கள் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறது. அண்மையில் பின்லாந்திலிருந்து, ஒரு தூதுக்குழு வந்திருக்கிறது, தங்கள் நாட்டில் மரங்கள் வேண்டிய அளவில் கிடைப்பதாகவும், வேண்டுமானால் தருவதாகவும் கூறிக்கொண்டு!

மத்திய சர்க்காரின் நிலை அப்படியிருக்கிறது! எங்கே என்னயிருக்கிறது, அவைகளை எப்படி வளமாக்கலாம் என்பதுகூட அறியாமல், புரியாமல்!

இந்நிலையில், மாகாணத்துக்கு எவ்வளவோ வழிகளில் நன்மைபயக்கக்கூடிய காட்டிலாகாக் கல்லூரியைமத்தியசர்க்கார் வசம் ஒப்புவித்துவிட்டு 'உட்கார்ந்திருக்கிறது, மாகாண சர்க்கார். மத்தியசர்க்காரோ, மதோன்மத்த நிலையில் இருக்கிறது. கல்லூரியின் வகுப்புகளுக்கு "மூடுவிழா" நடத்துகிறது!

இதை மாகாணசர்க்கார், எண்ணிப்பார்க்க வேண்டாமா! தனது கோரிக்கைகளை நிறைவேற்றாதது மட்டுமின்றி, இருப்பதையும் கெடுப்பது கூடாது என்றாவது எடுத்துக் கூறவேண்டாமா!

அல்லது, வேண்டாம், உங்கள் நிர்வாகத்திலிருந்து விட்டுவிடுங்கள். நாங்களே பார்த்துக்கொள்கிறோம் என்றாவது துணிந்து கேட்கவேண்டாமா!

என்ன செய்யப்போகிறது, மாகாண அரசாங்கம்! மூடுவிழாவுக்கு மத்தளம் தட்டப்போகிறதா அல்லது மார்க்கம் ஏதாவது காணப் போகிறதா, மாகாணநலனைக் கருதி!

# அனைத்தும் அர்ச்சனை மயம்!

நாட்டுக்கு நன்மையொழியத் தீமை ஏதும் செய்யோம் என்று 'நல்வாக்கு'க் கூறி நாடாள வந்த காங்கிரஸ் கட்சியினரின் இன்றைய நிலை, காங்கிரஸ் கட்சியில் இருக்கும் கனவான்களாலேயே வெறுக்கப்படக்கூடிய அளவுக்கு வந்துவிட்டது. காங்கிரஸ் ஆட்சியினரால் கொண்டுவரப்படும் எந்தத் திட்டமும், அதே கட்சியில் இருப்பவர்களாலேயே கண்டிக்கப்படுவதைக் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். எந்த ஒரு திட்டமும் முழு ஆதரவுடன் நிறைவேற்றப்படுவதில்லை. அதிகாரத்தால் அடித்துப் பேசியே இன்றைய ஆளவந்தார்கள் தங்கள் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றி விடுகின்றனர். அதாவது ஜனநாயகத்தைச் சாக்கடையில் தள்ளிவிட்டுச் சர்வாதிகாரமுறையில் ஆட்சியை நடத்திச்செல்கின்றனர். என்றாலும், பத்திரிகைகளிலும் மேடைகளிலும் 'ஜன நாயகம்' இடம் பெற்று விடுகிறது! இதற்குக் காரணம், சர்வாதிகார ஆட்சி புரிந்த ஆங்கிலேயனை விரட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுவந்த 'ஜனநாயகம்' என்றசொல்லைத் திடீரென்று மாற்றிவிடக்கூடாது என்ற முறையிலேயே இன்றைய ஜனநாயகம் இருப்பதால், அந்தச் சொல், அடிக்கடி பத்திரிகைகளிலும் மேடைகளிலும் பழக்க வாசனையால் இடம்பெற்றுவிடுகிறது. ஆனால் செயல் முறையில் வரும்போது ஜனநாயகம் என்ற சொல்லுக்குப் பொருளும் பயனும் இல்லாமல் போய்விடுகிறது. இதற்கு மேற்கோளாக எத்தனையோ நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டமுடியும். என்றாலும், இன்றைய ஆளவந்தார்கள், ஜனநாயக முறைக்கு மாறாக இந்தி மொழியை இந்நாட்டில் பரப்புவதற்கு எந்த அளவுக்குத் தங்கள் சர்வாதிகாரத்தைக் கையாளுகிறார்கள் என்பதை மட்டும் இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

இந்தி, இந்நாட்டுக்குப் பொது மொழியாகும் தகுதியற்றதென்பதை, இந்தியை இந்நாடு முழுவதும் பரப்ப முன்வந்த காலத்திலிருந்தே கூறிவந்திருக்கிறோம். இந்தியை இந்நாட்டுச் சிறார்களுக்குக் கட்டாய பாடமாக 1937—ல, இரட்டை ஆட்சிக் காலத்தில் முனைந்தபோது, அதனை எதிர்த்து ஆயிரத்து மேற்பட்டவர்கள் சிறை சென்றும், இரு இளைஞர்கள் உயிர் துறந்தும் அத்திட்டத்தை முறியடித்து வெற்றி கண்டோம். இந்திபடிக்கவிருப்பமில்லாதவர்கள் மீது அதனைக் கட்டாய பாடமாகப் புகுத்தக் கூடாதென்று அப்போது முடிவு செய்யப்பட்டது. பிறகு இரட்டை ஆட்சிநீங்கி ஒற்றை ஆட்சி ஏற்பட்டது. அதாவது ஆங்கிலேயரும் காங்கிரஸ்காரரும் சேர்ந்து ஆட்சி புரிந்த நிலை மாறிக், காங்கிரஸ்காரரே தனி ஆட்சி புரியும் நிலை ஏற்பட்டது உடனே கொஞ்ச நஞ்சம் இருந்த ஜனநாயகமும் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டது. யார் ஜனநாயகம் பேசி மக்களைத் தங்கள் பக்கம் திருப்பி ஆட்சிப்பீடம் ஏறினார்களோ, அவர்களே "அது ஏன் நமக்கு" என்று கூறிச் சர்வாதிகாரத்தையே தங்களின் ஆட்சிக்குத் துணையாக்கிக் கொண்டனர். மீண்டும் கட்டாய இந்தி கொண்டு வரப்பட்டது. பலருக்குச் சிறைவாசமும் தடியடியும் பரிசாகக் கிடைத்தது. அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சூழ்ச்சியே இந்த இந்தி எதிர்ப்பு இயக்கம் என்று இழித்தும் பழித்தும் பேசப்பட்டது.

இந்தி நமக்கு வேண்டாம்—அதனால் நாம் அடையும் நன்மை ஏதும் இல்லை என்பதற்கு நாம் கூறிய காரணங்கள் எல்லாம் துச்சமாகக்கருதப்பட்டன. ஆளவந்தார்களால் மட்டும் இவ்வாறு இழிவாகப்பேசப்படவில்லை. ஆளவந்தார்களை அணைத்து, அவர்கள் செய்யும் தவறுகளை எல்லாம் தந்திரமாக மறைத்து வருவதே தங்கள் கடமை என்ற முறையில் பணியாற்றி வரும் ஏடுகள் பலவுமே நம்மையும், நம்முடைய பணியையும் இழிவாக எழுதி வந்தன — ஏட்டில் இடம் பெறும் அளவுக்கு ஏசலுரைகளைக் கக்கின! இன்னும் இந்தப் 'பெரும் பணியை'ப் பல ஏடுகள் விடாமல் செய்துதான் வருகின்றன. என்ற போதிலும், சில ஏடுகள், ஆளவந்தாரின் போக்குகளை உணரத் தொடங்கிவிட்டன. ஜனநாயகம் தவிடுபொடியாவதை அறிகின்றன. இருக்க இடம் கேட்டவர்கள், மடத்தையே பிடுங்கும் மாபாதகச்செயல் புரிகின்றனர் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டன.

நம்முடைய இந்தி எதிர்ப்பை ஏளனஞ்செய்த ஏடுகள் சில, இப்போது, நம்மைவிட ஒருபடி மேலே போய் இந்தி எதிர்ப்புப் பணியைச் செய்யத் தொடங்கிவிட்டன.

புதிய அரசியல் திட்டம் நாட்டிலுள்ள பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படவேண்டுமென்ற முடிவின்பேரில், இப்போது, சில சொற்களை, எல்லா மொழிகளுக்கும் பொதுவாக வைக்கவேண்டுமென்றும், அதற்கு இந்திமொழியிலுள்ள சொற்களையே எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடே இந்த இந்தி எதிர்ப்புக்குக் காரணமாகும். அதாவது, புதிய அரசியலமைப்பில் வரும் சில சொற்களுக்கு இந்தி மொழிச் சொற்களையே மற்ற மொழிகளுக்கும் எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்துள்ளனர். இந்த முடிவையே, அன்று, நம்முடைய இந்தி எதிர்ப்பை ஏளனம் செய்த ஏடுகளில் ஒன்றான "தினசரி" இன்று தன்னுடைய முழுப்பலமும் கொண்டு எதிர்க்கிறது. இப்போதாவது 'தினசரி'க்கு இந்தி நுழைப்பின் உட்காரணம் என்ன என்பது விளங்கி அதனை எதிர்க்கும் துணிவு பிறந்தது கண்டு களிப்படைகிறோம். "கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த ஒன்று நன்றுள்ளக்

கெடும்" என்ற பொய்யா மொழிக்கேற்பத், 'தினசரி' நம்முடைய இந்தி எதிர்ப்பைப் பலவாறெல்லாம் கேவலப்படுத்தி எழுதிவந்த போதிலும், இப்போது இந்தி நுழைப்பின் சூட்சமத்தை உணர்ந்து, அதனை எதிர்க்க முற்பட்டதானது, நம்மீது அது சாட்டிய தவறான குற்றச்சாட்டுகளை எல்லாம் மறந்துவிடும்படி செய்துவிட்டது.

இந்தி தமிழ்மக்களுக்கு வேண்டப்படாத ஒரு மொழி என்றும், இந்தி நுழைவால் தமிழ் மொழி கெட்டுவிடுமென்றும் நம்மால் எடுத்துக் காட்டப்பட்ட காரணங்களுக்கு நாம் பயன்படுத்திய சொற்களை விடக், கடுமையான சொற்களால் 'தினசரி' இந்தி நுழைப்பவர்களைக் கண்டிக்கிறது.

"எல்லாப் பாஷைகளிலும் அரசியல் வார்த்தைகள் ஒரேமாதிரியாக இருக்கவேண்டுமென்பதற்காகப் புரியாத புதுப்பதங்களையெல்லாம் புகுத்தி வைப்பதென்றால், அப்படிப்பட்ட மொழிப் பெயர்ப்பும் வேண்டாம், மண்ணாங்கட்டியும் வேண்டாம் என்று சும்மா இருந்துவிடுவதுதான் நல்லது"

என்று இந்த எதிர்ப்பை ஏளனம் செய்த 'தினசரியே' எழுதுகிறதென்றால், இந்தி எந்த அளவுக்குத் தமிழ் மக்களையும், தமிழ்மொழியையும் பாழ்படுத்துகிறதென்பது தெளிவாகத்தெரிகிறது. மண்ணாங்கட்டி என்ற இந்த இந்தி எதிர்ப்புச்சொல, நம்முடைய இந்தி எதிர்ப்பில் நமது கவனத்துக்குக்கூடவராத சொல்என்பதை நண்பர்கள் உணரவேண்டும். இலக்கியமற்ற மொழி, இலக்கணவரம்பற்றமொழி, வளமற்ற மொழி, லம்பாடிமொழி என்றெல்லாம் இந்தியைப்பற்றி கூறியிருப்போம். ஆனால், மண்ணாங்கட்டி என்ற சொல்லை நாம் பயன்படுத்தியதே கிடையாது. அப்படிப்பட்ட ஒருசொல்லை இப்போது "தினசரி" பயன்படுத்திஇந்திஎதிர்ப்புப்பணியைச் செய்கிறதென்றால், இந்தி நுழைவால் தமிழ் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது— தமிழ் மக்கள் எந்த அளவுக்கு அலட்சியப் படுத்தப்படுகின்றனர் என்பது விளங்குகிறது.

நகத்தால் கிள்ளி எறியவேண்டிய ஒன்றைக் கோடரிகொண்டுவெட்டவேண்டிய அளவுக்கு வளரவிட்டுக், கோடரி எங்கே கிடைக்கும்? நமக்கு உதவாத — தேவைப்படாத அந்த நச்சுமரத்தை எப்படியாவதுவெட்டியாகவேண்டும் என்று இப்போது "தினசரி" முனைந்திருக்கிறது. மிகவும் மகிழ்ச்சி. முளையிலேயேகிள்ளி எறியவேண்டிய இந்தி என்னும் நச்சுப்பூண்டை மரமாக வளரும்படிவிட்டு விட்டு இப்போது அதனை வெட்டுவதற்குக் கோடரிதேடுகிறதே என்று 'தினசரி'மீது நாம் கோபமோ பொறாமையோ கொள்ளவில்லை — அதனைவெட்டி எறிவதற்குரியகோடரி நம்மிடம் இருக்கிறதென்ற காரணத்தால். கோடரிமட்டுமல்ல! இந்தி என்ற நச்சுமரத்தின் ஒவ்வொரு உறுப்புக்களையும், அதற்குரியகருவிகளைக்கொண்டு வெட்டியெறிவதற்கு வேண்டிய நல்ல கூர்மையான கருவிகளும் அவற்றிற்குரிய பலம் பொருந்திய ஆட்களும் நம்மிடம் உண்டு. ஆனால் ஒன்றுமட்டும் 'தினசரி'க்குக் கூற விரும்புகிறோம். அதாவது, நாம் அந்த நச்சுமரத்தை வெட்டும்போது, குறுக்கேவந்து நின்றுகொண்டு "இந்த மரத்திலுள்ள இன்னகிளையை வெட்டாதீர்கள்— அதோ அந்தக் கிளையை வெட்டுங்கள்—இந்தக்கிளையில் பாதியை மட்டும் வெட்டுங்கள்—இதனால் நன்மையுண்டு—அதனால் தீமையுண்டு— இன்னொன்றால் கொஞ்சம் நன்மையும் கொஞ்சம் தீமையும் உண்டு" என்பதாக யோசனைகூறவேண்டாம்— தடுக்கவேண்டாம் — தடுப்பவர்களுக்கு ஆதரவு தரவேண்டாம் என்று மட்டும் கேட்டுக்கொள்கிறோம்.

இந்தி என்ற இந்த நச்சுமரத்தை நாம் வெட்டியெறியவேண்டுமென்று முற்பட்ட காலத்தில், நம்மோடு ஒத்துழைக்காவிட்டாலும், நம்முடைய முயற்சிக்கு எதிர்ப்புணர்ச்சி காட்டாமல் இருந்திருந்தாலாவது, நம்முடைய இந்தி எதிர்ப்பைத் தவறாக எண்ணியவர்கள் பட்டியலின் தொகை குறைந்திருக்கும். என்றாலும் நம்முடைய இந்தி எதிர்ப்புப் போர் இன்னும் முடிவடையாத நிலையில்இருப்பதால், இப்போதாவது இந்தப் பட்டியலின் தொகை குறைகிறதே என்ற மகிழ்ச்சி நமக்கு ஏற்படுகிறது.

மத்திய சர்க்கார், இந்திமொழியைப்பற்றி மேலும்மேலும் கொண்டுவந்து நம்மீது சுமத்த இருக்கும் சுமைகளைக்காண நேரிடும் போது, இங்குள்ள இந்தி ஆதரவாளர்களின் பட்டியல் மேலும் மேலும் குறையும் என்ற நம்பிக்கையும் நமக்கிருக்கிறது.

புது அரசியலமைப்புச் சட்டங்களை நாட்டிலுள்ள பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கும் போது, இந்திமொழி ஒன்றுக்கே முதன்மையான இடமளித்து, அந்த மொழியிலுள்ள சொற்களையே அதிக அளவில் புகுத்தும் முயற்சிக்கே இவ்வளவு எதிர்ப்பென்றால், புதிய அரசியல் அமைப்பின் பேரால் நாடு ஆளப்படும் நிலைமை ஏற்படும்போது, இந்தி தெரிந்தவர்களுக்குத்தான் உத்தியோகம், மற்றவர்களுக்குக் கிடையாது என்று கூறும் சட்டம் வராதென்று யார் எதிர்பார்க்க முடியும்? அந்த நிலை ஏற்படும்போது இந்தி ஆதரவாளர்களின் தொகைமேலும் சிறிது குறையும். இப்போது மத்தியசர்க்காரின் அரசியலமைப்புச் சட்ட விதிகளில் இந்தி அதிக இடம் பெற்றிருக்கிறதென்றால், இன்னும் சிறிது காலம் போனால், மாகாண சர்க்கார்களின் அரசியலமைப்பு விதிகளும் இந்தியில்தான் இருக்கவேண்டுமென்று சட்டம் வராதென்று யார்தான் எதிர்பார்க்காமல் இருக்கமுடியும்? அந்த நிலை ஏற்படும் போது, மேலும் இந்தி ஆதரவாளர்களின் தொகை சிறிது குறையும். இவ்விதம் படிப்படியாக இந்தியின் ஆக்ரமிப்பு இங்கு அதிகப்பட அதிகப்பட அதன் தொல்லை தாங்கமுடியாத நிலை ஏற்பட்டே தீரும். அப்போது, இந்தி இந்நாட்டின் பொது மொழியாவதை ஆதரித்து இப்போது தலையங்கங்கள் தீட்டி இந்தி எதிர்ப்பாளராகிய நம்மைத் திட்டும் பல பத்திரிகைகள், "இதற்காகத் தானா இந்தியை இந்நாட்டின் பொது மொழியாக்கினீர்கள்? இதை இந்தி எதிர்ப்பாளர்கள் அன்றே நமக்குக் கூறினார்கள். நாங்கள் தேசியத் திரை மறைவில் இருக்கவேண்டியவர்களாகையால், 'உங்களுடைய சூழ்ச்சி இந்த அளவுக்கு வேலை செய்யுமென்று எதிர்பார்க்கவேயில்லை. இப்போதும் நாம் தேசியத் திரை மறைவில்தான் இருக்கிறோம்— இருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம், என்றாலும் இந்த அக்கிரமத்தை நாங்கள் பொறுத்து

கொள்ள மாட்டோம்—தேசியப் போர்வையால் மூடிவைக்கவும் மாட்டோம்" என்று பல பத்திரிகைகள் தலையங்கங்கள் தீட்டத்தான் போகின்றன.

நாம் எப்போதாவது எதிர்பார்த்தோமா, 'தினசரி' இப்படி ஒரு தலையங்கம் எழுதி இந்தி எதிர்ப்புச் செய்யுமென்று! ஆனால், இப்போது நம்முடைய பணியில், கொஞ்சம் பங்கெடுத்துக்கொண்டு 'தினசரி' பணியாற்றத் தொடங்கிவிட்டது. எப்படிப்பட்ட பணி?

"யாருக்கும் சுலபத்தில் புரியாத இத்தகைய புதுப் புகுத்தல்களுக்குத் தமிழர் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஒரே மாதிரி அரசியல் பதப்பிரயோகம் என்ற பெயரால் அனாவசியப் புகுத்தல்களுக்கு முயற்சி செய்யப்படுமானால், தமிழர் அதைக் கட்டாயம் எதிர்த்தே தீருவார்கள்"

என்று எழுதுகிறது. இந்தி என்ற நச்சுமரத்தின் கிளைகளில் ஒன்று தீங்கு பயக்கும் என்பதை உணர்ந்தபோதே 'தினசரி'க்கு இவ்வளவு எதிர்ப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டதென்றால், அந்த மரம் முழுவதுமே தீமை விளைவிக்கக்கூடியதுதான் என்பதை நம்மைப்போல் உணரும் நிலை ஏற்பட்டால், இன்னும் எந்த அளவுக்கு அதனுடைய எதிர்ப்புணர்ச்சி எழும்பி வேலை செய்யும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

நாம் பலகாலமாகவே சொல்லியும் எழுதியும் வருகிறோம், தமிழ்தனித்தியங்கக்கூடிய மொழி — அதற்கு வேறுமொழிகளின் துணையும், ஒட்டு வேலையும் வேண்டாம் என்பதாக. அப்போதெல்லாம் நம்மைக் கிண்டலும் கேலியும் செய்தவர்கள், இன்று தமிழ்மொழியின் அருமைபெருமைகளை அழகாக எழுத முற்பட்டுவிட்டார்கள். இதுவும் நமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்திதான். தமிழ்மொழியின் தூய்மையையும் அதன் தனித்தியங்கும் இயல்பையும் இப்போதாவது உணர்ந்தார்களே என்பதில் நமக்கு மகிழ்ச்சியே. இந்த மகிழ்ச்சி நிலையுள்ளதாக இருக்கக்கூடிய முறையில் இனிமேலாவது அவர்கள் நடந்துகொள்வார்கள் என்று நம்புகிறோம்.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் சில இந்திச் சொற்களை எல்லாமொழிகளுக்கும் பொதுவாக வைத்து வழங்கவேண்டுமென்று தீர்மானித்திருப்பதைக் கண்டித்துத் தலையங்கம் எழுதிய 'தினசரி' பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறது:—

"தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்திப் பண்டிதர்களின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளவே முடியாது. வளர்ச்சி பெறாத போதிய சொற்களில்லாப் பஞ்சத்திலிருக்கும் பாஷைகள் வேண்டுமானால். அப்பதங்களை உபயோகித்துக் கொள்வதில் தமிழருக்கு ஆட்சேபணை இல்லை.

தமிழில் சொற்களுக்குப் பஞ்சமில்லை. அரசியலை அப்படியே தமிழாக்கித் தமிழருக்குத் தங்குதடையின்றிப் புரியவைக்கத் தமிழில் ஏராளமான சொற்கள் உண்டு. அச்சொற்கள் எல்லாம் பழக்கத்திலும் இருந்து வருகின்றன. அரசியல் தமிழ்மொழிபெயர்ப்பை இவ்வகையில் செய்யத்தான் தமிழர் ஒப்புக்கொள்ள முடியுமேயன்றி, இந்திப் பண்டிதர்களின் ஆசை நிறைவேறட்டும் என்பதற்காகத் தமிழுக்குள் வீண் குளறுபடி செய்யத் தமிழர் சம்மதிக்க முடியாது"

நாம் இந்தியை ஏன் எதிர்க்கிறோம் என்பதற்கு எந்தெந்தக் காரணங்களைக் கூறினோமோ, அவற்றில் சிலவே 'தினசரி' மேலே எடுத்துக் காட்டியுள்ள காரணங்கள்.

தமிழ் வளமுள்ள மொழி. தமிழில் சொற்களுக்குப் பஞ்சமில்லை.

தமிழ் தனித்தியங்கக் கூடியது.

எதனையும் தமிழில் ஆக்கிக் கொள்ள முடியும்.

தமிழில் ஏராளமான சொற்கள் பயன்படுத்தப்படாமலும், பயன்படுத்தும் வகை தெரியாமலும் மங்கிக்கிடக்கின்றன.

வேறுமொழி பழக்கத்தில்வந்துவிட்டால், தமிழ் மேலும் வளமும் வளர்ச்சியும் குன்றிவிடும்.

சமஸ்கிருதத்தாலும் ஆங்கிலத்தாலும் தமிழ் தன் இனிமையை இழந்து வளங்குன்றிவிட்டது.

இந்த நிலையில் மேலும் புதுப்புது மொழிகளைக்கொண்டு வந்து தமிழின் புனிதத் தன்மைக்கு இழுக்குத்தேட வேண்டாம்.

என்ற இன்னபிறகாரணங்களைக் காட்டியே இந்தி எதிர்ப்பைச் செய்துவருகிறோம். இதற்காக நாம் தேசத்துரோகிகள், அரசியலைக் கவிழ்ப்பவர்கள் என்ற பழிக்கும் ஆளாகியிருக்கிறோம். காரணம், நம்முடைய நோக்கம் என்ன என்பதை அறியாததுதான். ஆனால் இப்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக, நம்முடைய முயற்சி புனிதமானது என்பதற்கான அறிகுறிகள் தோன்றி வருகின்றன.

தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதால் அதன் வளமும் வளர்ச்சியும் குன்றுமென்று நாம் சொன்னபோதெல்லாம், தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்த்தால்தான் அது வளர்ச்சியடையுமென்று சொன்னவர்களே, இப்போது, 'தமிழில் ஏராளமான சொற்கள் உண்டு. அரசியலை அப்படியே தமிழாக்கிக்காட்டமுடியும்" என்று கூறுகிறார்கள். இந்த நிலை இந்திமொழியின் அளவுக்கு மிஞ்சிய அடக்குமுறையால் ஏற்பட்டதாகும். புதிய அரசியலைத் தமிழில்மொழிபெயர்க்கும்போது, குறிப்பிட்ட சிலசொற்களுக்கு இந்திச் சொற்களையே வைத்து வழங்க வேண்டுமென்று முடிவு செய்துள்ளார்கள். எவை அந்தச் சொற்கள்? எப்படிப்பட்ட சொற்கள்? என்று கேட்கிறீர்களா? அவற்றுள் சில:—

பூராஜஸ்வா

பிமா

சம்விதான சபா

சககாரிசமஸ்தாயன

ராஜ்யபாலா

உச்சநியாயாலயா

இவை, புதிய அரசியலில் சேர்க்கப்பட்டுள்ள புதிய இந்திச் சொற்கள் பலவற்றுள் சில.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சொற்களில் ஒன்றாவது உங்களுக்குப் புரிகிறதா? புரிகிறது ஒருபுறமிருக்கட்டும், ஒரு சொல்லையாவது நீங்கள் கேள்விப்பட்டதுண்டா?

(12-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

ஞாயிறு] 11—12—49 [காஞ்சி


## 'பணவாபஸ்'

உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது, அமெரிக்க அரசாங்கத்தால் 34955 டாலர்களை (ரூ 1,66,000) இந்தியசர்க்காருக்கு அனுப்பிவைக்குமாறு! இந்திய சர்க்காரின் விவசாய, வியாபாரத்திட்டங்களை, காரியமாற்றுவதற்கு உதவும் வகையில் இத்தொகையை அமெரிக்க சர்க்கார் அளிக்க முன்வந்துள்ளனராம்!

அனுப்பப்படும் பணத்துடன்கூட, இந்திய சர்க்காரின் புதுத்திட்டங்களை நடத்திச்செல்வதில்கூட இருந்து ஆலோசனை முதலியவைகளைக் கூறுவதற்கும் ஒரு ஆளை அனுப்பிவைக்குமாம்!

* * *

மூலதனம் போடத்தயாராகயிருக்கிறோம், இந்தியாவில் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதுபற்றி எங்களுக்குத்தயக்கமில்லை, ஆனால் இந்தியசர்க்கார் போதுமான உறுதிமொழியளிக்குமா என்பதில்தான் கொஞ்சம் எங்களுக்குச் சந்தேகம் எழும்புகிறது. இருந்தாலும், நாங்கள் இந்தியாவில் மூலதனம் போடத்தயார்தான்!

இவ்வண்ணம், அமெரிக்க முதலாளிகள் எண்ணங்கொண்டிருப்பதாக அமெரிக்காவின் ஏற்றுமதி ஸ்தாபனமான டேவியா லாரன்ஸ் கம்பெனி எனும் பெரிய கம்பெனியின் மானேஜர் ஜுவெல் நியுயார்க்கில் அண்மையில் வெளியிட்டிருக்கிறார்!

* * *

இந்தியா அன்னிய ஆதிபத்தியத்தை வெளியேற்றிய நாடாயிற்றே, நமக்கு அங்கு இடம் கிடைக்குமா, நாம்போய் புதுஆலைகளை உண்டாக்க அனுமதிக்குமா என்றெல்லாம் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்த அமெரிக்க முதலாளித்துவத்துக்கு நேருவின் விஜயம், மிக்கமகிழ்ச்சியைத் தந்திருக்கிறது!

அனாதைகளாய் நிற்கிறோம் ஆபத்தில் உதவ வருவீர், என்று இந்தியப் பிரதமரும் அவர்களுக்குப்பராக்குக் கூறி 'வருக, வருக' என வரவேற்புரை அளித்துவிட்டு வந்துள்ளார். அதுமுதல், அமெரிக்க முதலாளிமார்கள், இந்தியாவில் தங்கள் மூலதனத்தைக் கொண்டுவந்து போடுவதற்கான துடி துடிப்புடன், ஆயத்தங்கள் செய்ய ஆரம்பித்துவிட்டனர்!

அமெரிக்க முதலாளிமார்களின் மூலதனம்மட்டுமின்றி, கடன் என்ற பெயராலும், உதவி என்று கூறியும், இந்தியாவுக்குப் பணம் தருவதில் அமெரிக்கா அதிக சிரத்தைக்காட்டத்துவங்கியிருக்கிறது. சீனா சிவப்பாகி, சியாங்கேய்ஷேக் தப்பஇடமின்றித், தவிக்கும் காட்சிகள் நெருங்க, நெருங்க அமெரிக்கா இந்தியாவுடன் அதிக நட்பையும், நேசத்தையும் உண்டாக்கிக்கொள்வதில், முன்பைவிட, சிரத்தை காட்டத்துவங்கியிருக்கிறது.

* * *

அமெரிக்கா, ஆபத்பாந்தவன், கஷ்டம் தீர்க்கும் காவலன், கவலை போக்கும் மருத்துவன் என்றே, இன்றைய ஆளவந்தாரும், அவரைச் சேர்ந்தோரும் கருதுகின்றனர் — மக்களுக்கு எடுத்துச் சொல்லுகின்றனர். வெளிநாடுகளுக்கு உதவிஎன்ற பெயரால் அமெரிக்காஆங்காங்குள்ள நாடுகளுக்குப் பணம்தர முன்வரும் இரகசியமென்ன வென்பதை நாம் அடிக்கடி எடுத்துக் கூறிவருகிறோம். பணபலத்தால், ஆசைவார்த்தையால், ஒவ்வொரு நாட்டையும் தனது கூடாரத்தில் இழுத்துப் போட்டுக்கொண்டு, அவைகளைத் தன் உற்பத்திப்பொருள் விற்கும்'சந்தை'யாக்கத் திட்டமிட்டு, அதன்படிசெயல்களைச் செய்து வருகிறது அமெரிக்கா!

ஆனால், இங்கிருப்பவர்களோ, அமெரிக்காவின் தயாளகுணம்பற்றியும், ஆபத்தில் உதவும் அருஞ்செயல்பற்றியும் துதிபாடுகின்றனர்!

இந்தியா சுதந்திரமடைவதில் எவ்வளவு சிரத்தை அமெரிக்க காட்டியது என்பது நாட்டிலுள்ளோருக்குத் தெரியும்! இன்று அமெரிக்காவின் அதிதியாகச் சென்று திரும்பியிருக்கும் பண்டித நேரு அமெரிக்காவின் மீது எத்தனை தடவை 'கனல் கக்கி'யாக இருந்தார் என்பதும், நம் நினைவைவிட்டு இன்னும் ஓடிவிடவில்லை!

இந்திய சுதந்திரத்திற்கு, எள்ளளவும் தலையசைப்போ, உபசாரச் சொல்லோ, தராத அமெரிக்கா இன்று ஆப்த நண்பன் உருவில் காட்சியளிக்கிறது!

அன்று 'அனல் கக்கி'களாக இருந்த ஆளவந்தாரும், அமெரிக்காவின் தர்மசிந்தை தயாளகுணம், எளியோர்க்குதவும் இரக்கம் இவைகள் பற்றி விரிவுரை கூறுகின்றனர், விளக்கம் தருவதில் ஈடுபடுகின்றனர்!

சுயநலமும், சுகவாழ்வைப் பெருக்கும் சூதுமதி ஆகியவைகளின் விளைவுகளே அமெரிக்காவின் இன்றைய அன்பு நடிப்பும், அருமை நண்பன் காட்சியும் என்று நம்மனோர் கூறினால், 'இவர்களின் வேலையே இதுதான்' என்று, அலட்சியத்தையும் காட்டிவிடுகின்றனர் — பதிலாக.

சுதந்திரம் பெற்ற எந்த நாடும் குழந்தை நிலையில்தானிருக்கும், அதுவளர எவ்வளவோ வழிவகைகள் வேண்டியிருக்கத்தான் செய்யும். ஆனால் குழந்தைக்குப் பால் வேண்டும் என்பதற்காக, குழந்தையையே இன்னொருவரிடம் அடகு வைப்பது, அழகாகுமா! அதுபோலத்தான், இன்றுள்ள நிலையும். அமெரிக்காவை ஆப்த நண்பன் என்று கருதுகிறார்கள், காங்கிரஸ் ஆட்சியாளர். அதன் காரணமாக கடன்கொடுங்கள், கட்டிக்கொள்ளுங்கள் ஆலைகளை என்று அனுமதியும் உபசரிப்பும் நடத்துகின்றனர்.

ஆனால் இவர்கள் எண்ணுவது போலபரோபகார சிந்தையுடனும், உதவ வேண்டும் என்ற உயர் குணத்துடனும் அமெரிக்கா நடந்துகொள்கிறதா!

இல்லையென்பது மட்டுமல்ல, "உதவி" என்ற பெயரால் பிறநாடுகளுக்கு அது வழங்கி வருகிறதல்லவா, பணம், அதன் "உண்மை"யைப் பாருங்கள்!

டிசம்பர் 8-ந் தேதியிட்டு வாஷிங்டனிலிருந்து அமெரிக்க சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது, தன்னிடம் மார்ஷல் திட்டப்படி உதவி பெற்று வரும் பிரிட்டன் முதலாய மேற்கத்தி நாடுகளுக்கு! அந்த

உத்தரவு! 'மார்ஷல் திட்டப்படி அளிக்கப்பட்ட உதவியின் மதிப்பில் 3 கோடி டாலரை திருப்பித் தருக' என்பதுதான்! உதவி வழங்கும் உத்தமப் போக்கைப் பாருங்கள், கடன் கொடுத்த தொகையில் 3 கோடியை 'வாபஸ் செய்' என்று அதிகாரத்துடன் கட்டளையிட்டிருக்கிறது!

இந்நடவடிக்கை ஏன் தெரியுமா! மார்ஷல் உதவி பெற்ற நாடுகள், தாங்கள் அனுப்பும் சரக்குகளில் 7 சத விகித பாகத்தை அமெரிக்கக் கப்பல்களில் ஒப்பந்தப்படி அனுப்பி வைக்க வேண்டுமாம். அப்படி, அனுப்பிவைக்க அந்நாடுகள் தவறிவிட்டன என்பதற்காகவே அமெரிக்கா இந்நடவடிக்கை, "சொற்படி கேட்காத உங்களுக்கு இதுதான் அபராதம்" என்று கூறுவதுபோல, எடுத்திருக்கிறது. 'பண வாபஸ்' கோரியிருக்கிறது.

அமெரிக்கக் கப்பல்களில், அந்நாடுகள் சரக்கை ஏற்றவில்லை. அதனால், தனக்கு வரக்கூடிய வருமானம் பாதிக்கப்படுகிறது என்று கண்டதும் ஆத்திரத்துடன் 'அபராதம்' விதிக்கிறது, 'பண வாபஸ்' கோருகிறது! அமெரிக்கா, அன்பு உள்ளத்துடன் சுயலாபம் கருதாமல் வெளிநாடுகளுக்கு உதவி செய்வதாகச் சொல்லித் திரிகிறார்களே, அவர்கள் பார்வைக்கு இந்நிகழ்ச்சியைக் கொண்டு வருகிறோம்.

தனது லாபம் குறைகிறது என்றும், மிரட்டுகிறது அமெரிக்கா!

வருமானம் குறைந்ததும் 'பண வாபஸ்' கோரி அமெரிக்கா மிரட்டுகிறது பிரிட்டன் முதலிய நாடுகளை! அதேநேரத்தில் இந்த இப்போது பணம் உதவும் திருப்பணியைத் துவங்குகிறது! இரண்டையும், தேசியத் தோழர்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்!

✲

11-ம் பக்கத்தொடர்ச்சி

மூலதனம் தவிர இலாபமாகப் பெற்றிருப்பது ரூபாய் 12-லட்சம் ஆகும்!

போட்ட முதல் எவ்வளவு, அது வளர்ந்திருப்பது எவ்வளவு என்ற பட்டியலைப் பார்த்ததும், 'பணதிபத்தியத் தோட்டம்' எவ்வளவு விரைவில் பலனளிக்கிறது என்பது, தெரிகிறதல்லவா!

விமானங்களின் தேயமானம், வேறு செலவினங்கள் ஆகியவைகளுக்கெனச் செலவிடப்படுவதாக, கம்பெனி, கூறுவது என்ன தெரியுமா! மூன்றுஆண்டுக்கு 66-இலட்ச ரூபாய்கள்!! மொத்தமிருப்பதோ, 21-விமானங்கள். இவைகள் விலை எப்படிப்பார்த்தாலும் 62-இலட்ச ரூபாய்க்குமேல் போகாது. 62-இலட்சரூபாய் கொண்ட விமானங்களுக்கு, மூன்று ஆண்டு, தேய்மானம், 'ரிப்பேர்' முதலியவற்றிற்கான தொகைமட்டும் 66-லட்சம்!

இவ்வளவு கொள்ளைலாபமும், கணக்கும் காட்டும், டாடா நிர்வாகிகள், புதிதாக ஒரு விமானசர்வீஸ் அரசாங்கத்தாரால் அனுமதிக்கப்பட்டது என்று அறிந்ததும், கொதித்து எழுந்துள்ளனர்! நஷ்டம் வந்துவிட்டது என்று அலறியுள்ளனர்! சர்க்கார்மீது பாய்ந்துள்ளனர்! அதுவும், சர்க்கார், இவர்களுடைய 'தாசன்' போல, இருந்து வந்திருக்கிறதே யொழிய, என்றும் இவர்களை 'ஏனென்று' கேட்டோ, முடியாது என்று மீறியோ எதுவும் செய்ததாகத் தெரியவில்லை.

டாடாவை மீறுவதென்றால், அதுவும் காங்கிரஸ் ராஜபாதிபதிகளுக்கு சாமான்யகாரியமா, என்ன! விவாதத்தின்போது போக்குவரத்து மந்திரியார், பல செய்திகளைக் கூறுகிறார். இதுபோன்று எத்தனை நிகழ்ச்சிகள் தெரியுமா, என்றும் கூறுகிறார். டாடா கம்பெனியின் தலையீட்டால் பாரத் ஏர்வேஸ் என்கிற கம்பெனிக்குத் தரவிருந்த, அனுமதிகூட நிறுத்தப்பட்டதாம், இத்துணைக்கும் பாரத் விமானப் போக்குவரத்து கம்பெனியார் குறைந்த கட்டணத் தொகையில் ஒரு பாதையை தாங்கள் நடத்துவதாக முன்வந்து கூறியிருந்தும்!

இதேபோல, 'மழைகாலம் இப்போது இரவு சர்வீசை நிறுத்தி வைப்பது நல்லது' என்று டாடா யோசனை சொன்னதின்பேரில், மழைகாலம் தீரும்வரை, இரவுபோக்குவரத்தை நிறுத்திவைக்குமாறும் இந்திய சர்க்கார் உத்தரவிட்டதாம் முன்பு!

அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கும் அளவு செல்வாக்குக் கொண்டிருந்தும், பணதிபத்தியத்தின் ஆசை விடவில்லை—தன் லாபத்தைப் பாதிக்கும் வகையில் இன்னொரு கம்பெனி, உண்டாவது பிடிக்கவில்லை! வெறுப்பும், துவேஷமும், அதன் விளைவாக ஆட்சியாளர்மீது, மறைந்து நின்று போர் நடத்தும் பொல்லாச் செயலில் ஈடுபடவும் ஆளாகியிருக்கிறது!

பணதிபத்தியத்துக்குப் பரிந்து பேசுவதும், கூடிக் குலாவுவதுமே தேசிய சேவையெனக் கருதுவதுமான, ஆளவந்தாருக்கு, டாடாவின் பாடம் நல்ல படிப்பினை! மறக்கமுடியாத சவுக்கடி!!

தனிப்பட்டவர்கள் நிர்வாகத்தில், பொதுமக்களுக்கு நன்மை பயக்கக் கூடியவைகளை, விட்டுவைப்பதன் விளைவு எத்தகையது என்பதை விளக்கிவிட்ட ஒரு நிகழ்ச்சி இது!

இதை, இன்றைய ஆளவந்தார், உணர்ந்தால் நல்லது! விமானப் போக்குவரத்து-விஞ்ஞானம் தந்த ஒன்று! நாம்தான் வேதாந்திகளாயிற்றே, என்று விலக்கிவாழமுடியாத இன்றியமையாத தேவை! இதை, இன்னும் தனிப்பட்ட பணமுதலைகள் வசம் விட்டு வைப்பதும், அவைகள் அதட்டலுக்கும் மிரட்டலுக்கும் பயந்து வாழ்வதும், பரிதாபப்படக்கூடிய காரியமாகும்!

ஆண்டுக்கு சுமார் 50 லட்சம் ரூபாய்களைத் தனிப்பட்ட விமான கம்பெனிகளுக்காக, விமானபோக்குவரத்து வளரவேண்டும் என்று காரணம்கூறி சர்க்கார்பெட்ரோல்வரியில் 'வட்டம்' போட்டு-குறைவு செய்து-தந்தும், அவைகளின் ஆசை அடங்கியபாடில்லை! இன்னும், அதிக சலுகைகளும், சர்க்காரை பயமுறுத்தி காரியங்களைச் சாதிக்கவும் முயல்கின்றன! மிரட்டுகின்றன! "போர்" நடத்துகின்றன!!

டாடா தரும் பாடம், பணதிபத்தியத்தின் ஆசைக்கொரு அளவில்லை என்பதற்கான விளக்கம்! நாட்டையும், மக்கள் நலனையும் என்றுமே அது கருதாது; தன் சுகவாழ்வையே பெரிதென மதிக்கும் என்பதை விளக்கும் அரிச்சுவடி!

✲


## தேவை

கொழும்பு நகரில் "திராவிட நாடு" விற்பனை செய்வதற்குப் போதிய முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை. விபரங்கட்கு மானேஜர், "திராவிட நாடு" காஞ்சிபுரம் என்ற விலாசத்துக்கு எழுதவும்.

மானேஜர்

# டாடா தரும் பாடம்!

[அரங்கண்ணல்]

கொள்ளை லாபம்! அதை அதிகரிக்கும் கள்ள வழிகள்!!

'பண மூட்டை'களின் வாழ்க்கை இலட்சியமே, இதுதான்! தங்கள் வாழ்வில் எப்போதும் வசந்தம் வீசிக்கொண்டிருக்கவேண்டும், இது தங்கு தடையின்றி நடைபெற, மக்களின் நலனையோ, தான் பிறந்து வாழும் நாட்டின் முன்னேற்றத்தையோ பலிகொடுக்க எப்போதுமே பணதிபத்தியம் தயங்குவதில்லை. எனவேதான், பணதிபத்தியத்தை, பண முதலை என்ற பெயராலும் அழைப்பதுண்டு.

அடிக்கும் காற்று, சிறிது சீறிடும் புயலாகுமேயானால், நாணலைப்போல வளையும், ஆனால் அடுத்த நிமிடமே நிமிர்ந்து நிற்கும்!

ஆளவந்தார், சிறிது சீறும் புத்தியினராக இருப்பாரேயானால் பணிந்த பாவை போல, பணதிபத்தியம் நடிக்கும் — சிறிதுகாலம் ஆகிவிட்டால் நவரசனை தரும் நாரீமணியாக நாட்டியம் புரியும்!

அதன் வஞ்சக வலையில், ஆட்சிப் பீடம், அகப்பட்டு 'மோகினியே, உன் முத்தமே என் வாழ்வை நித்தமும் வளர்க்கும்' என்று சல்லாப உரைகளும், சரச வார்த்தைகளும் வீசத் துவங்கிவிட்டால், பணதிபத்தியம், 'பஸ்மாசூர மோகினி'யாகி விடும்! பின்னர், ஆட்டிவைத்தால் யாரொருவர் ஆடாதாரே என்ற நிலை தான் அரசாங்கத்துக்கு ஏற்படும்— அதன் விளைவு மக்கள் வாழ்வு புயலில் அகப்பட்ட புல் போல ஆவது தான்! மாற்றாந்தாய் வசப்பட்ட மக்கள் ஆவதுதான்!

பணதிபத்தியம்-ஒரு பச்சோந்தி! தேன் தடவப்பட்ட நஞ்சு! மோகன மெருகிடப்பட்ட பசும் நாகம்! பசுத்தோல் போர்த்திய புலி! சிரித்து மடக்கிச் சித்திரவதை செய்யும் சிலந்தி!!

மகுடங்கள் சரிந்தாலும், பணதிபத்தியத்துக்குச் சிறிதுகூட பயமோ, பதட்டமோ, இருக்காது. அதன் எண்ணமெல்லாம், வந்த ஆளை வீச, எந்த வலை நல்லது என்பதிலேயே இலயித்திருக்கும். அதன் குறியெல்லாம், தன் வாழ்வு, மீது இருக்குமேயொழிய நாட்டின் நிலையென்ன, நல்லது செய்பவர்களாக நாம் இருக்கக் கூடாதா, கஷ்டப்படும் ஆட்சிக்கு கை கொடுப்பது நல்லதுதானே என்று இருக்காது! அந்த எண்ணமே எழும்பாது!! அதனால்தான் பணதிபத்தியத்தின் போக்கை முதலாளித்துவ மூர்க்கத்தனம் என்று அழைப்பர்!

குடிசைகள் வீழ்ந்து, குடிபடைகள் அலறி, சாவும்வேதனையும், சஞ்சலமும் பட்டினியும், எங்கும் நிலவுகிறதென்றாலும், முதலாளித்துவம், மோகனவல்லிகளுடன் கொஞ்சிக் குலாவி கும்மாளமடிக்குமே தவிர கொஞ்சங்கூட ஆடாது! அசையாது!!

ஆளவந்தாருக்கு ஏற்பட்ட அல்லல், அதன் வாயிலாக மக்கள் வாழ்வில் நெளியும் வேதனை, இது எதுவும் பணதிபத்தியத்தின் இருதயத்தை எட்டவும் எட்டாது! எனக்கும் இரும்புப் பெட்டிக்குந்தான் சம்பந்தமேயொழிய, இதயத்துக்கும் எனக்கும் என்ன இருக்கிறது! என்று அலட்சியத்தையே பதிலாகத் தரும்!

காங்கிரஸ் ஆட்சிப்பீடம் ஏறியது முதல், பணதிபத்தியத்தையே தன் பக்கபலம் என நம்பிக்கொண்டும், அதன் ஆலோசனைகளே வெண் சாமர வீச்சு என்று கருதிக்கொண்டும் இருக்கிறது என்று, நம்போன்றோர், குற்றம் சுமத்திவருகிறோம். இந்தப் போக்கு நல்லதல்ல, நன்மை விளைக்காது, பணமூட்டைகளின் பாதையில் நடப்பது, பலன் தராது, என்றும் ஆபத்தையும் அல்லலையுமே உண்டாக்கும் என்பதாக எடுத்துக் கூறி வருகிறோம். இவையாவும் ஆளவந்தாருக்கு, செவிடன் காதில் ஊதிய சங்கொலி போலவே ஆயிற்று!

ஏதோ இவர்கள் வாழ்வே, பண மூட்டைகள் கைவசம் இருப்பதாகவே எண்ணிக்கொண்டு, அவர்கள் இட்ட(?)த சட்டம், அவர்களுக்கு நல்ல பிள்ளைகளாக நடப்பதே. நமது கடன் என்று கருதிக் கொண்டே நடந்து வருகின்றனர். அவ்வளவு அன்பும், ஆசையும், ஆதரவும் ஆளவந்தார் காட்டினாலும், பணதிபத்தியம் நடுங்கவைக்கும் நாரீமணி போல மிரட்டிக் கொண்டுதான் இருந்துவருகிறது! அதுமட்டுமல்ல, எங்கெங்கு தனது ஆதிபத்தியம் இருக்கிறதோ, எங்கெங்கு தனது வருமானம் வளரும் வகைகள் இருக்கிறதோ, அதன் பக்கம் இன்னொருவர் அண்டாமலும், நெருங்கி வந்தால் அதட்டியும், அடாபிடி செய்தும் வருகிறது, தான் நடத்தும் தொழில் தனது ஏதேச்சாதிகாரத்துக்குத்தான் என்ற எண்ணத்தின் காரணமாக, ஒரு தொழில் தனக்குச் சொந்தமாக இருந்தால், அத்தொழிலில் வேறு ஒருவரும் ஈடுபட்டு அத்தொழிலை வளர்க்க முன்வராமல் தடுத்து வருகிறது — தனது பண பலத்தால், ஆட்சியாளரை மிரட்ட முடியும் என்ற தன்னம்பிக்கையால்!

இந்த உண்மை, அண்மையில் இந்தியசட்டசபையில் நடைபெற்ற விவாதத்தின் விளைவாக, வெளிப்படையாகத் தெரியும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது!

* * *

"ஓரே ஒரு கம்பெனி எதேச்சாதிகாரம் செலுத்த நான் ஒரு போதும் விரும்பவே மாட்டேன்!

ஒருகம்பெனி, சர்க்கார் நிபந்தனைகளின்படி நடக்க ஒப்புக் கொண்டது என்பதற்காக ஒரு சில கம்பெனிகள் கூட்டாகச் சேர்ந்து, அந்தக் கம்பெனியைப் பழிவாங்க முயலுகின்றன."

இந்த, கூற்றுகள், முறையே இந்தியப் பிரதமர் நேரு, போக்குவரத்து மந்திரி ரபீ அஹமத்கித்வாய் ஆகியோர் இந்திய சட்டசபையில் வெளியிட்டதாகும்.

தற்போது, நடைபெற்று வரும் இரவு விமானத்தபால் போக்குவரத்தை உடனடியாக நிறுத்த வேண்டுமெனக் கோரி நவம்பர் 30-ந் தேதியன்று, இந்திய சட்டசபையில்

ரோகிணிகுமார்சவுத்ரி என்பவர் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

அவரது தீர்மானத்தை ஏற்பதற்கில்லையென்றும், இரவு விமானத் தபால் போக்குவரத்தால் எந்தவிதமான நஷ்டமும் ஏற்படவில்லையென்றும்,முன்னைவிட சுமுக்கமாகவேவருவதாகவும் விளக்கப்பட்டு, அத்தீர்மானம் ஏற்கப்படவில்லை. இதையொட்டிப் பேசியபோதுதான், பிரதமரும், போக்குவரத்து மந்திரியாரும், மேலே குறிப்பிட்ட குறிப்புகளை வீசியுள்ளனர். போக்குவரத்து மந்திரியார், குறிப்பை மட்டுமல்ல தந்திருப்பது, ஒரு பெரிய விளக்கத்தையே தந்திருக்கிறார்—பணிபத்தியம் எந்த அளவுக்குச் சர்க்காரை மிரட்டுகிறது என்பது விளங்கும்படியாக!

இந்தியசர்க்கார் கடந்த பிப்ரவரி முதல் விமானமூலம் தபால் போக்குவரத்தை அனுப்புவதென முடிவு செய்து, அதன்படி நடத்திவருகின்றனர். இந்தக் காரியத்தை ஏற்று நடத்துமாறு, இந்தியாவில் விமானப் போக்குவரத்துகளை நடத்திவரும் பல கம்பெனிகளுக்குத் தெரிவித்திருந்தும், அவை ஏதுவும் சர்க்காருடைய கோரிக்கைக்கு இணங்கவில்லை—இந்த ஏற்பாடு மூலம் தங்களுக்கு வருவாய் கிட்டாது, தொல்லைகள் ஏற்படும் என்ற காரணங்களைக் காட்டின. இந்தியாவின் பணிபத்தியத் தூண்களில் ஒருவரான டாடாவால் நிர்வகிக்கப்பட்டுவரும், (Air Services of India) என்ற கம்பெனி, வசதிகள் நிரம்பியது, இரவு சர்வீசை நிர்வகிக்கக்கூடியது என்ற எண்ணத்தின் பேரில், சர்க்கார் முதலில் அவர்களுக்கே, அழைப்பு விடுத்தனர், இயலுமா என்று கேட்டனர். ஆனால், அவர்களோ, அதிக தொகையும், நிபந்தனைகளும் கேட்ட காரணத்தால் குறைந்த தொகையும், சர்க்கார் நிபந்தனைகளுக்குட்பட்டும் வந்த இந்தியன் ஓவர்சீஸ் (Indian Overseas) விமானக் கம்பெனிக்கு கல்கத்தா — பம்பாய், டெல்லி—சென்னை ஆகிய இடங்களுக்கு இரவு விமான சர்வீஸ் நடத்த அனுமதியளிக்கப்பட்டது.

பொதுமக்கள் நலனை உத்தேசித்தும், தபால் முதலிய போக்குவரத்துகள் விரைவாகச் செல்ல வேண்டுமென்று கருதியும் இரவு விமானப்போக்குவரத்தைத் துவங்க சர்க்கார் நினைதத்து.

இதைச் செய்ய, வசதிகள் நிரம்பிய டாடா கம்பெனியாரை அழைத்தது. அவர்களோ வருமானநஷ்டம் ஏற்படும் என்று கூறி, மறுத்துவிட்டதோடு, அப்படி ஆரம்பிப்பதாகயிருந்தால் இரவில் பிரயாணிகளை ஏற்றிச் செல்லுவது போன்ற அனுமதியும் தரப்பட வேண்டுமென்ற நிபந்தனைகளை விதித்தது.

எனவே, இந்தியசர்க்கார் வேறொரு கம்பெனியார் தாங்கள் ஏற்று நடத்துவதாக முன்வந்த காரணத்தால் அவர்களுக்கு அனுமதியளித்தனர். அதுமுதல், டாடா கம்பெனியாரின் ஆத்திரமும், சீற்றமும் இந்திய சர்க்கார் மீது புயல் என எழும்பியது. கடந்த பத்து மாதங்களாக, இந்தியப் போக்குவரத்து மந்திரி சபையின் மீது, "போர்" நடத்தியவண்ணமாகவே இருந்து வந்துள்ளனர்—சர்க்காரின் ஏற்பாட்டால் ஏமாற்றமடைந்த கம்பெனிகளை உடன் சேர்த்துக் கொண்டு!

இரவு விமான சர்வீசால் எங்கட்கு இலாபம் இல்லை!

தபால் போக்குவரத்தால், முன் கிடைத்த வருமானம் போய்விட்டது!

சர்க்கார் ஒத்துழைப்பில்லை, தொழில் நசித்துவிடும்!

என்பன போன்ற பயமுறுத்தல்கள் மூலம், சர்க்காரைக் கண்டித்தும், போக்குவரத்து மந்திரி சபையின் மீது சீறிப் பாய்ந்தும், மூட்டை மூட்டையாகக் குற்றங்களை வீசும் திருப்பணியில் இறங்கியது! அதை ஆதரிப்போரும், இரவு விமான தபால் சர்வீஸ் கூடாது, என்று கூக்குரலிட ஆரம்பித்தனர்!

* * *

டாடா விமான சர்வீசாரின் கூற்று உண்மையா, அவர்கள் கூறுவது போல, இரவு விமான தபால் போக்குவரத்துகளைத் துவங்கியதால் ஏதாவது நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா ஏனைய கம்பெனிகளுக்கு, எவ்வளவு நஷ்டம் எற்பட்டிருக்கிறது என்று பார்த்தாலோ, கிடைக்கும் விடை வேடிக்கையாக இருக்கிறது! முன்னைவிட வருமானம் அதிகமாகி இருக்கிறதே ஒழிய, குறையவில்லை!

டாடா கம்பெனி, ஒரு மைலுக்கு ரூ 5—8—0, தனது விமானத்துக்குச் செலவழிக்கிறது என்று கூறுகிறது, தனது குற்றச்சாட்டில். ஆனால், மைலுக்கு ரூ 3—8—0 வீதம் வருமானம் பெற்றும் டெக்கான் ஏர்வேஸ் போன்ற கம்பெனிகளுக்கு இலாபம் வந்திருக்கிறதே ஒழிய நஷ்டம் ஏற்படவில்லை!

* * *

தான் கேட்டதைக் கொடுத்துத் தன்னிடமே இரவு விமானத் தபால் போக்குவரத்தையும் விடவில்லை என்ற ஆத்திரத்தின் பேரில், சர்க்கார் மீது, தீப்பொறி பறக்கத் தினசரி கண்டனக் கணைகள் விடுவதில் ஈடுபட்டிருக்கும் டாடாவின் கம்பெனி வளர்ந்த கதையைப் பாருங்கள்!

1932ல், இந்தக் கம்பெனி, டாடா நிர்வாகிகளால் தனிப்பட்ட முறையில் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொன்றும் ரூ 20,000 மதிப்புள்ள மூன்று விமானங்களும், அவைகளை நிர்வகித்து ஓட்டுவதற்கென ஒருலட்ச ரூபாயும்தான் இக் கம்பெனியின் மூலதனம். அப்போதே, தபால் போக்கு வரத்துக்கென பவுண்டு ஒன்றுக்கு ரூ 5 வீதம் சர்க்கார் செலுத்தி வந்திருக்கின்றனர்.

1944ல், இக்கம்பெனியாருடைய கணக்கு சர்க்கார் பார்வைக்கு வந்தது, மேற்படி கம்பெனியை, அவர்கள் ஒரு லிமிடெட் ஸ்தாபனமாக ஆக்கவிரும்பியதன் காரணமாக! அதுபோது கம்பெனியின் மூலதனம் ரூ 10 லட்சம் என்று காட்டப் பட்டிருந்தது.

1944-45-ல் அவர்களுக்கு மொத்தம் 12-லட்ச ரூபாய் லாபமாக வந்தது.

பிறகு 1946-ல் இக் கம்பெனி (Air India Limited) எனக் கூட்டு ஸ்தாபனமாக ஆயிற்று. அதுபோது இதன் ஐவேஜு ரூ. 13-லட்சம் என்று கூறப்பட்டதோடு வளர்ச்சி மதிப்பு (Good-Will) ரூ 20-லட்சம் என்றும் மதிப்புப்போட்டு மாற்றப்பட்டது. இதெல்லாம் சேர்ந்துதான் இக்கம்பெனியின் மூலதனம்!!

(9-ம் பக்கம் பார்க்க)

## அனைத்தும் அர்ச்சனை மயம்!

7-ம் பக்கத் தொடர்ச்சி

"இந்தி அரசியல் வார்த்தைகள் ஜாபிதாவில் அடங்கியுள்ள எல்லாமே விசித்திரமானவை என்பதுமாத்திரமல்ல, யாருமே கேட்டு மறியாதவை"

என்று "தினசரியே" எழுதுகிறது.

பூராஜஸ்வா! இதற்கு என்ன பொருள்? தெரியாது. இந்திப்பண்டிதர் கூறுகிறார் இதற்குப் பொருள் 'கிஸ்தி' என்று. அதாவது நிலத் தீர்வை என்ற தமிழ்ச் சொல்லைக் கொலை செய்துவிட்டு இனிமேல் பூராஜஸ்வா என்றுதான் சொல்ல வேண்டுமாம்! பிமா என்றால் ஆங்கிலத்தில் இன்ஷூரன்ஸ் என்று பொருள். இந்த ஆங்கிலச் சொல்லுக்கு என்ன தமிழ் என்பது உண்மையில் பலருக்குத் தெரியாது. அந்த அளவுக்குத் தமிழ், ஆங்கிலத்தால் கொலை செய்யப்பட்டுவிட்டது. இன்ஷூர் என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொறுப்புக் கட்டுதல் என்று பொருள். அதாவது ஒருவருடைய பொருளை இன்னொருவர் பொறுப் பேற்றுப் பாதுகாத்துக் கொடுப்பது என்று பொருள் சம்விதான சபா! இதன் பொருள் அரசியல் நிர்ணய சபை. இதற்குத் தமிழில் அரசியல் அமைப்பு மன்றம் என்று பெயர். சககாரி சமஸ்தாயன! இதற்குப் பொருள் என்ன தெரியுமா? கூட்டுறவுச் சங்கம் தான் புதிய அரசியலில் 'சககாரி சமஸ்தாயன' ஆகிவிட்டது. ராஜ்யபாலா! என்ன இது? இதுதான் இப்போதிருக்கும் கவர்னர் என்ற சொல்லுக்கு இந்திப் பண்டிதர்கள் இட்டிருக்கும் புதிய பெயர். கவர்னர் என்ற ஆங்கிலச் சொல்லுக்கே தமிழ்ச் சொல் என்ன என்பது தமிழ் மக்கள் பலருக்கு இன்னமும் தெரியாது. கவர்னர் என்றால் ஆட்சித் தலைவன், ஆளுபவன் என்று தமிழில் பெயர்கள் உண்டு. ஆனால் இனிமேல் கவர்னரை அதாவது ஆட்சித் தலைவனை ராஜ்யபாலா என்றுதான் அழைக்கவேண்டுமாம். உச்சநியாயாலயா! நாக்கை அறுத்துப் பல்லை உடைக்கும் இந்தச் சொல்லுக்கு என்ன பொருள் தெரியுமா? ஹைகோர்ட்! ஹைகோர்ட் என்றால்தான் பலருக்குப் புரியுமேயன்றி உயர் அறமன்றம் அல்லது உயர் நீதி மன்றம் என்று கூறினால் பலருக்கும் புரியாதபடி தமிழ் கொலை செய்யப்பட்டிருக்கும் போது, இனிமேல் உயர் நீதி மன்றம் என்று அழைப்பதை விட்டு, அதனை உச்சநியாயாலயா என்றழைக்கவேண்டுமாம்! கோயில்களில் கூறப்படும் அர்ச்சனைச்சுலோகங்கள்போல் இருக்கின்றனவே இந்தச்சொற்கள் என்று யோசிக்கிறீர்களா? ஆம்! அப்படித்தான் ஒலிக்கின்றன!

"தஸ்மாத் யோகாய யுஜ்யஸ்வ
யோக: கர்மஸு கௌசலம்"

என்று பகவத்கீதையில் வரும்சுலோகம்போலவேதான் இந்தச்சொற்களையும் உச்சரிக்கவேண்டியிருக்கிறது. இனிமேல் உயர்நீதி மன்றம் என்று கூறுவதைவிட்டு, உச்ச நியாயாலயா என்றழைக்கும்போது, அந்தச்சொல்லுக்கு முன்னால் ஓம் என்பதைச் சேர்த்து ஓம் உச்ச நியாயாலயா என்று உச்சரித்துக்கொண்டே போய்க்கடைசியில்நமஹா என்பதையும்சேர்த்து, "ஓம் உச்சநியாயாலயா நமஹா!" என்று கூறினால்கூட அதை யாரும் தவறென்று சொல்லமாட்டார்கள். ஏனென்றால், இனிமேல் நடக்கவிருக்கும் அரசியலே இராமராஜ்யமாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. எனவே, இராமராஜ்யத்தில் அனைத்துமே அர்ச்சனைமயமாக இருக்கலாமல்லவா?

எப்படி இருக்கிறது இந்தி நுழைவால் நாம் அடைந்த பலன்! இந்தியை எதிர்க்கிறோம்? தேசிய பாஷையைக் கண்டிருக்கிறோம்! என்று கணைபூட்டிய கனவான்களால் இப்போதாவது உணர முடிகிறதா இந்தி எதற்காக இங்கு நுழைக்கப்படுகிறதென்ற சூட்சமத்தை!

இப்பொழுதே இந்தி நம்மையும் நம்முடைய மொழியையும் இந்த அளவுக்கு ஆட்டிப்படைக்க ஆரம்பித்துவிட்டதென்றால், இனி, என்னவோ புதிய அரசியல், வரப்போகிறதென்று கூறுகிறார்களே, அப்பொழுது நாமும், நம்முடைய மொழியும் பிறநலன்களும் என்ன நிலையை அடையும் என்பதனை, இந்தி எதிர்ப்பை ஏளனம் செய்தவர்கள், குறிப்பாகக் காங்கிரசில் இருக்கும் தமிழ் நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

✲


வெளிவந்துவிட்டது!

**திராவிடர் டைரி—1950**

**500 பக்கங்கள்—விலை அணா 12**

ஒருபிரதி வேண்டுவோர் சாதாரணதபாலில் அனுப்ப ரூ. 0-14-0-ம்
பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 1—2—0-ம் அனுப்பவேண்டும்.
விற்பனையாளர்க்குக் கழிவு 20%
முன்பணமின்றி எவருக்கும் அனுப்பப்படமாட்டாது.

இந்த நாட்குறிப்பில்

சி. என். அ. யின் மொழிகள் நாளுக்கு ஒன்று வீதம் 365
தி. மு. கழகப் பொதுச் செயலாளர் புகைப்படம்
தி. மு. கழகக்கொடி—இரு நிறத்தில்
தி. மு. கழகத் தோற்றமும், வளர்ச்சியும்—முழு விவரங்கள்
தி. மு. கழக அமைப்பு முறை
தலைமைக் கழகப் பொதுக்குழு, துணைக்குழு விவரங்களும், உறுப்பினர் பெயர்களும்
கழகப் பேச்சாளர் பெயரும், முகவரியும்
தி. மு. கழகக் கிளைகள் 350-ன் விவரங்களும் செயலுறுப்பினர் பெயர்களும்—மாவட்டவாரியாக
தி. மு. மாணவர் கழக விவரங்களும் செயலுறுப்பினர் பெயர்களும்
பிறவும் அடங்கியுள்ளன.

**போர்வாள் அலுவலகம்**
பவழக்காரத் தெரு, சென்னை 1.

# நந்தவனத்திலோர் ஆண்டி!

நந்த வனத்திலோர் ஆண்டி—அவன்

நாலாறு மாதமாய்க் குயவனை **வேண்டி**

கொண்டுவந்தானொரு தோண்டி—அதை

கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி!

என்று பாட்டப் படுவதுண்டு, கேலியாக—நந்தவனத்து ஆண்டியொருவன், நாலாறு மாதங்கள் குயவனை வேண்டி, கொண்டு வந்தானும் ஒரு தோண்டி. பின் அதைக் கொண்டு, நீரிழுப்போம், செடிகளுக்கு விடுவோம் என்று எண்ணுமல் தோண்டி கிடைத்து விட்டது என்ற மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்து, கூத்தாடி, போட்டுடைத்தானும்!

முயன்று, முனைந்து ஒரு பொருளைப் பெற்று, அதனால் பெறும்பயன் கருதாது, ஆவேசத்துக்கும் ஆர்வத்துக்கும் ஆளாகி, அதை வீணுக்குபவர்களைக் குறித்து, இப்பாடல் பாடப்படுவதுண்டு!

* * *

கஷ்டப்பட்டு மரத்தில் ஏறி, மாங்கனியைப்பறித்து, கல்லும் முள்ளும் காலில் தைத்தாலும், கனி கிடைக்கப் போகிறது என்ற ஆசைமிகுதியால், களித்து நிற்கும் நண்பர்களை மறந்து, மனதார மலத்தில் வீசியெறிந்தால், அந்த வேதனைவிளையாட்டை எவருமே வெறுப்பர்; மதிகெட்டவனே, மரமண்டையா உனக்கு, வாயில் நீர்ஊற, பழம்விழப் போகிறது, என்று பார்த்துக் கொண்டே நிற்கிறோம், மலத்தை நோக்கி மாங்கனியை வீசிவிட்டு 'மன்னிப்பீர்!' என்று சொல்கிறாய், என்ன மனத்தைரியமடா உனக்கு! என்றே அதட்டிக் கேட்பர்!

* * *

காடு மேடுகளைந்து, கழனியாக்கப் போகிறேன் பாரீர்என்று கூறிக்கல்லையும் முள்ளையும் நீக்கிக் கடைசியில் காட்டெருக்கையும் கவைக்குதவாச் செடிகளையும் பயிராக்கி விட்டு, பலனில்லை பார்மின், இதற்கென்னசெய்வேன் கூறுமின் என்று கெஞ்சுதலோடு கூறுபவனைக்கண்டால், பயிர் விளையும் பசி நீங்கும் நெல்கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு, எரிச்சல்தான் உண்டாகும். ஏனப்பா, இதுதானா உன்னை நம்பிய தன் பலன் என்றுதான் கேட்பரே யொழிய, 'நீதான் என்ன செய்வாய் வருந்தாதே, வா பணம் தருகிறேன்' என்று எவரும் பாசங் கொள்ளமாட்டார்!

• • •

திரு விளக்கேற்றிடப் போகிறேன் திண்ணைகளில்லாம் தெருஜனங்களே எண்ணெய் தருவீர் என்று கேட்டு வாங்கிச் சென்று திரு விளக்கு ஏற்றாது, தெருக்கோடிக் குளத்தில் கொட்டிவிட்டு, தெருவாரே என் செய்வது செய்பிழை பொறுப்பீர், இன்னும் கொஞ்சம் எண்ணெய் தருவீர், என்று கூறிச் சென்றால், 'வீணனே எதற்கடா உனக்கு வேறு வேலையில்லையா, கொடுத்ததுபோதும் கோடி நமஸ்காரம் போய்வா தம்பி' என்று தான் சொல்வார்கள்!

* * *

நீரிழுக்கும் தோண்டியை உடைத்த ஆண்டியும், மரமேறி மாங்கனி பறித்து மலத்தில் வீசியவனும், காடு திருத்திக் காட்டெருக்குப் பயிரிட்டவனும், எண்ணெய் பெற்று திருவிளக்கேற்றாது திண்ணைகளை இருள் மயமாக்கினவனும் வேதனையுடன் போம்பண்ணும் விசித்திரங்கள் என்றுதான்கருதப்படுவர். தோண்டி மட்டும் கிடைக்கட்டும் தோட்டத்துச்செடிகளைப் பாருங்களேன்!

மாங்கனியைப் பறித்ததும், நண்பர்களே, உங்களுக்குத்தான்! காடு கழனியாகட்டும், கவலையெல்லாம் தீர்ந்துவிடும்!

எண்ணெய் பெற்றவன் திண்ணைகளையா மறந்துவிடுவான்!

என்றெல்லாம், ஆசையும், எண்ணமும்எழுப்பப்பட்டிருந்து, சொல்லியபடி செய்யாமல் அதனையும் வீணாக்கினால், எதிர்பார்த்தவர்களுக்குவேதனையும் ஆத்திரமும் எழும்பாது போகாது! வீணன், வேதனை தருபவன், எத்தன் என்றே எல்லாரும் தூற்றுவர்!

ஏமாற்றப்பட்ட உள்ளங்கள் 'எரிமலை'யாகத்தான் செய்யும்!

என்ன செய்வேன் நான், பொறுமையின் பூஷணமல்லவா தாங்கள் என்றுகூறி, தவறுசெய்துவிட்டேன்? தகாது பேசுகிறீர்களா? ஏது காரியம் மிஞ்சிவிட்டது என்று மிரட்டி, ஏதோ சொன்னேன் அப்படியே எல்லாம் நடந்துவிடவேண்டுமோ என்று அதட்டி, 'எரிமலை' போலநிற்கும் உள்ளங்களிடம் போய்ப் பேசினால் என்ன ஏற்படும்!

மண்குடம் எங்கே உடைந்திருக்கிறது, மாங்கனி மலத்தில் விழாது தடுக்க நான் என்ன மந்திரவாதியா, காடு கழனியாவதென்றால் சாமான்ய வேலையா, குளத்தில் கொட்டியது ஏன்தெரியுமோ? எல்லாம் நன்மைக்குத்தான், இன்னும் கொஞ்சம் எண்ணெய் கொடுங்கள் என்று, 'எரிமலை' போல ஆத்திரத்துடன் நிற்பவர்களிடம் வீணனும், வேதனை தருபவனும், விசித்திரப் புத்தியுடையவனும், எத்தனும் சென்று கேட்பார்களேயானால் அவர்களின் நெஞ்சுரம் உண்மையில் வியக்கக்கூடியதுதான்! சொன்னபடி நாம் நடக்கவில்லையே, எப்படி அவரவர் முகத்தில் விழிப்பது, என்ற எண்ணம் எழும்புவதற்குப்பதில் 'இதோ வந்துவிட்டேன்' என்று கூறிப்போய் நிற்பதென்றால் உண்மையில் அவர்கள் உள்ளம் வியக்கக்கூடியதுதான்!

சுயராஜ்யம் மட்டும் வரட்டும்!
ஆட்சியில் மட்டும் நாங்கள்
அமரட்டும்!

எவ்வளவோ செய்யப்
போகிறோம்!

வரியேல்லாம் சுரியாக விடு
வோமா!

என்று முழக்கமிட்ட காங்கிரஸ் பிரமுகர்களுக்கு, கனம் தங்கிய மந்திரிகளுக்கு இத்தகைய நெஞ்சுரம் ஏற்பட்டிருக்கிறது!

ஆட்சிப் பீடம் மட்டும் கிடைக்கட்டும், உரிமைகள் யாவும் அனுபவிக்கலாம், நன்மைகள் எல்லாம் மலரும், பட்டினி பசியெல்லாம் பறக்கச் செய்வோம், வரியெல்லாம் குறைத்து வாழ்வை வளமாக்கி விடமாட்டோமா என்று இன்றைய ஆளவந்தார்கள் அன்று, எண்ணற்ற மக்கள் முன் தினசரி முழக்கங்கள் எழுப்பினர், குடம் கிடைக்கட்டும், மாங்கனி எட்டட்டும், கழனியாக்குகிறேன், எண்ணெயைக் கொண்டு திண்ணைகளை ஜோதி மயமாக்குகிறேன் என்று கூறி ஆசை காட்டியவர்களைப் போல!

காங்கிரஸ், வெள்ளையரை விரட்ட வேண்டும், அவர்களை விரட்டி விட்டால் வேதனை நீங்கும், வாழ்விலே மலர்ச்சி ஏற்படும் என்று கூறியது. மக்களும், உண்மையென நம்பினர், இன்பம் கிடைக்கும் என எதிர்பார்த்தனர்! ஆனால் யாவும் இன்று வீணாகிவிட்டது, வளைந்த வாழ்வு நிமிர்க்கப்படவில்லை, முழக்கங்கள் வக்கணைப் பேச்சுகளாகிவிட்டன, வரிப்பணம் கரியாகத்தான் செய்கிறது! அன்று கர்ஜனை எழுப்பியவர்கள், ஆள்பவர்களாக ஆட்சிப் பீடம் ஏறிய பின், உறுதிமொழிகள் அத்தனையும் ஆசைகாட்டி மோசம் செய்தவர்களின் செய்கைகளைப் போலவே ஆயிற்று!

சுயராஜ்யம் வரட்டும் என்று கூறினர், அடக்குமுறைகள் யாவையும் அழித்துவிடுவோம், எல்லோரும் உரிமைகளுடன் வாழலாம் என்று கூறினர். ஆனால் கிடைத்த குடத்தைப் போட்டு உடைப்பது போல ஆயிற்று! ஆட்சியில் மட்டும் நாங்கள் அமரட்டும் என்று சொல்லினர், அமர்ந்தபின் மாங்கனியைப் பறித்ததும் மலத்தில் வீசியது போல ஆகிவிட்டது நிலைமை! காடுமட்டும் கழனி ஆகியது. ஆனால் எதிர்பார்த்தது ஏற்படவில்லை, காட்டெருக்கும், காட்டுச்செடிகளும்தான் வளர்க்கப் பட்டிருக்கின்றன!

வரியெல்லாம் கரியாகிறது, போலீசுக்கும் ஜெயிலுக்கும் பணத்தை விரயமாக்குகின்றனர், பிரிட்டிஷார். இது நல்லதா, இப்படியிருக்கலாமா, எங்கள் ஆட்சி மட்டும் வரட்டும் என்று கூறினர், வரியைக் குறைப்போம் என்று முழக்கமிட்டனர். ஆனால் நிலையோ, வீடுகளில் கேட்டுப் பெற்ற எண்ணெயைக் கொண்டு போய்க் குளத்தில் கொட்டுவது போலவே ஆயிற்று!

இருந்தும், சொன்னது போல நாம் நடக்கவில்லை, முந்திய நிலையை விட இப்போது எல்லா வகைகளிலும் இன்னலே அதிகமாகியிருக்கிறது நமதாட்சியில் என்பது தெரிந்தும் மக்கள் முன்னிலையில் சென்று,

மந்திரவாதிகளா நாங்கள்! சொன்னபடி நடக்கத்தான் முடியவில்லை! போலீசுக்கும், ஜெயிலுக்கும் அதிகம் செலவுதான் ஆகிறது!

கேட்டால் நீங்கள் வரி கொடுத்துத்தான் ஆகவேண்டும்! என்று மந்திரிமார்கள், மனந்திறந்து பேசுகிறார்கள், துணிச்சலோடு கூறுகிறார்கள், வரிகளை அதிகமாகத்தான் ஆக்குவோம், ஏனென்று கேட்காமல் நீங்கள் கொடுக்கத்தான் வேண்டும் என்பதாக. கள்ளிக்கோட்டையில் பவனிவரும் கனம் கோபாலர் கூறியிருக்கிறார்:-

“பாதுகாப்புச் செலவுக்காகக் கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய்கள் செலவிடுகிறோம். 1940 — 41ல் சிறைச்சாலைகளுக்கென 40 லட்ச ரூபாய்கள்தான் செலவழித்தனர். ஆனால் இப்போதோ ஜெயிலில் கூட்டம் அதிகரித்துவிட்டது. அதன் காரணமாக நாங்கள் 110 லட்சம் ரூபாய்கள் செலவிடுகிறோம்”

என்று, வெளிப்படையாக அறிவித்துள்ளார். தற்போது பாதுகாப்புக்கென நான்கு கோடி ரூபாய்கள் செலவிடுகிறோம் என்று கூறியுள்ளாரல்லவா, இவர்கள் ஆட்சிப் பீடம் ஏறுமுன், வெள்ளையர் காலத்தில் செலவழிக்கப்பட்ட தொகை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அப்போது பாதுகாப்புக்கென, போலிஸ் முதலிய நிர்வாகத்துக்கென 160 லட்சம் ரூபாய்கள்தான் செலவழித்தனராம்! தகவல் தருகிறார் அமைச்சர், அதைவிட இப்போது பாதுகாப்புச் செலவுக்கென அதிகம் செலவழிக்கிறோம் நாங்கள் என்று வேதனைப்படாமல் கூறுகிறார்!

அன்னியர் ஆட்சிக்காலத்தில் போலீசாரைச் ‘சனியன்கள்’ என்றே அழைத்தனர், ‘நாட்டுப் பாதுகாப்புக்கா செலவிடுகின்றனர் இவர்கள்? இல்லை! இல்லை!! இவர்களைப் பாதுகாத்துக்கொள்ளத்தான் செலவிடுகின்றனர். பாதுகாப்பு மக்களுக்கல்ல, இவர்கள் ஆட்சி அசையாமலிருப்பதற்குத்தான்!’ என்று முழக்கமிட்டனர். போலிஸ் என்றாலே, பொறுக்கமுடியாத விரோதமும் குரோதமும் காட்டினர். அதற்கெனச் செலவழிக்கப்படும் பணம் அத்தனையும் வீண் என்று முழக்கமிட்டனர். ஆனால், இன்றோ, மந்திரியார் மனங்கூசாமல் தெரிவிக்கிறார், வெள்ளையர் ஆட்சியைவிட எங்களாட்சியில் போலீஸ் நிர்வாகத்துக்கு நாட்டுப் பாதுகாப்புக்கு, வெள்ளையர் காலத்தைவிட அதிகம் செலவழிக்கிறோம் என்று, வெட்கப்படாமல் வேதனையில்லாமல்!

“பொறுமையில்லை மக்களுக்கு. எல்லாவற்றையும் உடனே செய்து தருவதற்கென்ன என்று விரும்புகிறார்கள்”

இதுவும் அவருடைய வாயிலிருந்து, சிந்திய முத்துக்களில் ஒன்று! மக்கள் பொறுமையாயில்லையாம், மந்திரியார் கூறுகிறார், மாங்கனிபறித்ததும் உங்களுக்குத் தருகிறேன், நீங்கள் தின்று மகிழலாம் என்று கூறி, மரமேறி அதை மலக்குழிநோக்கி வீசிவிட்டு, பின்னர் மனங்கலங்காது ஏனப்பா மனம் பதறுகிறீர்கள் என்று கேட்டானைப் போல!

மக்கள் பொறுமையைப் பூஷணமாகக்கொள்ளவேண்டுமாம்! இரண்டு ஆண்டு ஆட்சிக்காலத்தில், கூறிய உறுதிமொழிகளைக் காற்றில் பறக்கவிட்டு விட்டு, கும்மாளத்துடன்

பவனிவரும் மந்திரியார் கூறுகிறார், பொறுமனமே பொறு என்று! கூறியதுமட்டுமல்ல ஆத்திரத்துடன் கேட்கிறார்,

> “மந்திரிகளிடம் என்ன மந்திரக்கோலா இருக்கிறது, நினைத்ததையெல்லாம் செய்துமுடிக்க என்று!”

எப்படியிருக்கிறது வேடிக்கை, என்னென்னவோ செய்யப்போகிறோம் என்று கூறினீர்களே மகானுபாவர்களே, கொஞ்சம் மனதாலும் எங்களை நினைத்துப்பார்க்கக் கூடாதா, மந்திரிமார்களே, என்று கேட்டால், சினத்துடன் சீறிப்பாய்கிறார், நாங்கள் என்ன மந்திரக்கோலா வைத்திருக்கிறோம் என்று!

ஆட்சிப்பீடம் ஏறியதும், ஏதோ இவர்களிடம் மந்திரக்கோல் இருப்பதுபோலவும், மக்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் உடனடியாகச்செய்து தந்துவிட்டுப்போவது போலவும்தான் இவர்கள் முழக்கமிட்டனர்! ஆனால்மக்களுக்குத் தெரியும், இவர்களிடம் மந்திரக்கோல் இல்லை, என்பது. எனவேதான், பொறுத்துப் பொறுத்துப் பார்த்தனர். அதுவும் ஒரு மாதம் இரண்டு மாதமல்ல! இரண்டு ஆண்டுகள் பொறுமையுடன் தானிருந்தனர். அதுதெரிந்தும், மந்திரியார் கூறுகிறார், போலீசுக்கும் ஜெயிலுக்கும் அதிகப்பணம் செலவழிக்கிறோம் என்று கூறிய வாயாலேயே கூறுகிறார், நன்மைகள்யாவும் செய்யவேண்டுமெனக் கோருகிறீர்களே, எங்களிடம் என்ன மந்திரக்கோலா இருக்கிறது என்று!

அதுமட்டுமல்ல, வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் இவர்கள் விடுத்தகண்டனக்கணைகளில் ஒன்று, வரியைக் கரியாக்குகின்றனர், வசூலித்த எண்ணெயைக் குளத்தில் கொட்டுகின்றனர், என்பதாகும். எவ்வளவு வரிகள்! எவ்வளவு தொல்லைகள்! இதையெல்லாம் ஏழை எப்படிச்சுமப்பான் என்று குட்டிக்கதைகளுடனும்,கோபவார்த்தைகளுடனும் கேட்டனர். மக்கள் மன்றத்திலே கர்ஜித்தனர். அப்படி, அன்று முழக்கமிட்ட கனவான் கூறுகிறார் கேளுங்கள்.

> “இதுசெய்யவேண்டும், அதைச் செய்து தாருங்கள் என்று கேட்பதற்குமட்டும் குறைவில்லை. ஆனால் சர்க்கார் ஏதோ சில வரிகளைப் போடுவோம் என்று முன்வந்தாலோ, கூக்சல்போடுகின்றனர்!”

கூச்சல் போடுகிறார்களாம், கூறுகிறார் மக்களுக்காகத் தொண்டு புரிகிறோம் என்று சொல்லி, மந்திரிப்பீடம் ஏறியவர்!

> “குறளிவித்தையால் குவிக்கக் கூடியதா பணம். கொடுத்தால் தானே எங்களுக்கு. கொஞ்சம் அதிக வரி கொடுங்கள் என்றால் மட்டும் கோபம் வருகிறது. வசதிகளைமட்டும்எதிர் பார்க்கிறீர்களே!”

என்றும் கேட்டுள்ளார், கோபாலர். வேடிக்கையாகஇல்லை, வேதனையாக இருக்கிறது, நாடாளவந்தவரின் பேச்சு! நாம் தலைப்பில் குறிப்பிட்டோமே,சிலநபர்கள். அவர்கள்போக்கையும் மிஞ்சுவதாகஇருக்கிறது!

கேட்டுக் கொண்டே இருப்பாராம் மதி மந்திரியார், நாம் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டுமாம்! குளத்தில், எண்ணெயைக் கொட்டிக் கொண்டே, கொடுத்துக்கொண்டேயிரப்பா, எண்ணெயை என்று கூறுகிறார் நிதியமைச்சர்! மாங்கனியை மலத்தில் வீசி விட்டு, கோபம் வருகிறதே பொத்துக் கொண்டு, கொஞ்சம் பொறுமையாக இரேன் என்று கோருகிறார்.

அதிகவரி போடப்போட மக்கள் ஏனென்று கூட கேட்காமல், எதற்கு என்றும் எண்ணாமல், கொடுத்துக் கொண்டேயிருக்கவேண்டுமாம்! இருந்தால், குறைகளைப் போக்க முயற்சிப்பாராம்! கூறுகிறார், கோபாலர், கோபத்துடன், ஏதோ இப்போது மக்கள் வரிகொடா இயக்கம் நடத்திக் கொண்டிருப்பது போலக் கருதிக்கொண்டு!

அதிக வரி கொடுக்க மக்கள் அஞ்சக் கூடாதாம்! எங்கே பணம் என்றதும், இதோ இருக்கிறது என்று, ஏழை எடுத்துவைத்துக் கொண்டு ‘பாராக்கு’க் கூறவேண்டுமாம்! சொல்லுகிறார், காங்கிரஸ் கனவான், கொஞ்சங்கூட கூச்சமோ, நாச்சமோ இல்லாமல்!

நாம்தானே கூறினோம், நாங்கள் ஆட்சிப்பீடம் ஏறினால், இப்படியா இருக்கவிடுவோம்! வரிப்பளுவைக் குறைப்பதுதானே, எங்களது முதல வேலை! என்று, சிறிதுகூட சிந்திக்காது, மக்களை நோக்கி, கேட்கிறார் மகானுபாவர்—இல்லை கோபத்தால் மிரட்டுகிறார்—அதிகவரி கேட்டால், ‘ஏதுபணம்’ என்று அழுகிறீர்களே! அப்படி இருக்கும்பொழுது எப்படி அரசாங்கம் மட்டும் நன்மைகளைச் செய்துதர முடியும் என்று கலையுடன் கண்ணீர் சிந்தும் ஏழைகளைப் பார்த்து!

வரி கேட்டுக்கொண்டே இருப்பாராம், பொதுமக்கள் சிறிதுகூட ‘ஏன்’ என்றோ, எதற்கு என்றோ, வாய்கூடத் திறக்காது, எப்படியாவது கட்டிக்கொண்டே இருக்கவேண்டுமாம்! இருப்பதையும் கொடுத்துவிட்டு, என்ன செய்வேன் என்று வேதனை முகாரி எழுப்பிக் கொண்டு, ஓலைக்குடிசையில், ஓலமிட்டுத் துடித்து நிற்கிறார்களே, மக்கள் அவர்களை நோக்கி அதட்டுகிறார், ‘அன்பு’கொண்டு ஆளப்போவதாகக் கூறி ஆட்சிப் பீடம் ஏறிய மந்திரியார்!

இவர்களை என்னவென்று சொல்வது! இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெஞ்சுரத்தைத்தான் எதற்கு உவமானம் கூறுவது!

✽

## சந்தாதார்களுக்கு!

பன்முறை தெரிவித்தும், பலர் இன்னும், முகவரி மாற்றம் குறித்தோ, பத்திரிகை வாராமை பற்றியோ, கடிதம் எழுதும்போது சந்தாஎண் குறிப்பிடாமலே, கடிதம் எழுதுகிறார்கள். இதனால் எல்லா வகைகளிலும் சங்கடம் ஏற்படுகிறது. எனவே, இனி, சந்தாஎண் குறிப்பிடப்படாத கடிதங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா, என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி.

# முடிவிழா நடக்கிறது!

மாகாண சர்க்காரின் விவகாரங்களில் மத்திய சர்க்கார் அளவுக்கு மீறித் தலையிடுவதாக நாம் அடிக்கடி குற்றம் சாட்டி வருகிறோம். இந்திய சர்க்கார், தங்கள் ஏதேச்சாதிகாரத்தை, அப்படித் தலையிடுவதன் மூலம் அதிகரித்துக் கொண்டே வருகிறது, இதன் முடிவு, மாகாணங்களின் நலன்கள் யாவும் பாழாவதுதான் என்றும் எடுத்துக் குறிப்பிட்டு வருகிறோம்.

இவைகளைக் காணும் தேசியத் தோழர்கள், நாம் கூறுவது சரியா, தவறா,உண்மையிருக்கின்றதா என்று கூட எண்ணிப்பார்ப்பதில்லை. "இவர்களுடைய வேலையே, இது தானே!" என்று, அலட்சியத்தை அணைத்துக் கொண்டுபேசி விடுகின்றனர். இந்தியா ஏக தேசம் என்ற எண்ணத்தில், இவைகளைப் பற்றிச் சிந்திப்பது, சிலலறையிலே கவனம் செலுத்துவது என்றே கருதி விடுகின்றனர். பல துளி பெரு வெள்ளம் என்று கூறப்படுவதுண்டு, பல அணுக்கள் சேர்ந்தால் ரூபாயாகிவிடும் என்று சொல்வார்கள், அது நமது "நண்பர்கள்" உள்ளத்தில் மட்டும் படுவதில்லை. அவ்வளவு பரந்தமனப்பான்மையும், விரிந்த சிந்தையும் விளையாடுகிறது அவர்கள் இதயங்களில்! ஆனால் இதனால் விளையும் பலனே, மாகாணத்துக்கு நன்மை பயப்பதாக, மாகாண நலன்களை வளர்ப்பதாக, மக்கள் வாழ்வுக்கு பயனூட்டுவதாக, இருக்கிறதா என்று எண்ணினால், மத்திய சர்க்காரின் நடவடிக்கைகள் அப்படியிருப்பதில்லை. மாகாண நலன்களைப் பறிப்பதாகவே இருக்கிறது!

மத்திய சர்க்காரின் தாக்கீது பிறந்து விட்டால், மாகாண சர்க்காரும், 'இதோ, எடுத்துக் கொள்ளுங்கள்' என்று, அவர்கள் எதைக் கேட்கிறார்களோ அதை அவர்கள் வசம் ஒப்புவித்து, சரண் அடைவதே தங்கள் தேசீயச் திருச்சேவை என்று எண்ணி வருகிறார்கள்.

"ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு" என்று சொல்வது போல, சென்னை மாகாணத்துக்கென ஒரே ஒரு காட்டிலாகா கல்லூரி (Forest College)கோவையிலிருக்கிறது. காடுகளைக்காப்பாற்றுவதுஎப்படி, அவைகளைப் பயன் படுத்துவது எங்ஙனம், தேக்குமரம் இருக்கிறதே, எவ்வாறு அவைகளை வளர்ப்பது. அவைகளைக் கொண்டு மக்களுக்கானதேவைகளைச் செய்து கொள்வது, எந்த மண்ணில் எந்த மரம் வளரும்என்பதுபோன்ற பற்பல அறிவாராய்ச்சிகளைக் கற்க உதவுவதாகும் அக்கல்லூரி. மாகாணத்தின் செல்வத்தை வளமாக்கக் கூடியதான காடுகளை, மரமடர்ந்த பிரதேசங்களை, மனதில் வைத்து அவைகளைச் சரிவர நிர்வாகம்செய்ய அதிகாரிகளை உண்டு பண்ணவேண்டும் என்ற ஆர்வத்தின் பேரில், அன்னியர் ஆட்சிக் காலத்தில், கோவையில் 1912 ல் மேற்படி கல்லூரி நிறுவப்பட்டது.

அதற்கு முன்னரே 1906லேயே இந்தியாவில் டேராடூனில் இது சம்பந்தமான ஆராய்ச்சிகளைக் காணுவதற்கென் ஒரு கல்லூரி ஏற்படுத்தப் பட்டிருந்தும், இம்மாகாண நலனை உத்தேசித்துக், கோவையில் இந்தக் கல்லூரியை நிறுவினர்—பிரிட்டிஷ் ஆட்சியாளர். அப்படி அவர்கள் இங்கும் ஒருகல்லூரி இருக்கவேண்டுமெனக் கருதியதற்குக் காரணம், டேராடூன் கல்லூரியால், இம்மாகாணத்தின் தேவைகளைக் கவனிக்க முடியவில்லை, நன்மைகளைச் செய்ய இயலவில்லை என்று அறிந்ததினால் தான்.

கோவையில் கல்லூரி ஏற்பட்ட நாள் முதல், இம்மாகாணத்துக் காடுகளை நிர்வகித்து அவைகளைப் பரிபாலனம் செய்யக்கூடிய அதிகாரிகளை மட்டுமின்றி, அருகிலிருக்கும் சமஸ்தானங்கள், வேறு மாகாணங்கள் ஆகியவைகளுக்குத் தேவையான அதிகாரிகளும் இங்கு பயிற்றுவிக்கப் பட்டு வந்தனர்.

1945ல் காங்கிரசார் பதவியேற்குமுன், ஆலோசகர் ஆட்சி இருந்த காலத்தில் இந்தக் கல்லூரியைச் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்து, இன்னும் நல்லமுறையில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக வாக்களித்திருந்தனர். இந்தக் கல்லூரியில் படித்துத்தேறியவர்களுக்கு "பட்டம்" வழங்கவும் ஏற்பாடு செய்வதாகக் கூறியிருந்தனர். ஆனால், அது முற்றுப்பெறவில்லை.

மாகாணத்துக்கென இருக்கும் ஒரே ஒரு கல்லூரி, அதுவும் வெள்ளையராட்சிக் காலத்தில் இம்மாகாணத்துக்கு இன்றியமையாதது என்று கருதப்பட்டு ஏற்படுத்தப் பட்ட ஒரு கல்லூரி, கடந்த ஆண்டு, 1948 ஜூலை மாதம் மத்திய சர்க்காரால், மாகாண அரசாங்கத்தின் நிர்வாகத்திடமிருந்து மாற்றிக்கொள்ளப்பட்டது, எடுத்துக்கொள்ளப் பட்டது!

நமக்கென இருக்கும் ஒன்றை எங்கேயோ இருக்கும் இவர்களால் நல்லமுறையில் நிர்வகிக்க முடியுமா, நன்மைதான் நமக்குக் கிடைக்குமா என்பது பற்றிச் சிறிதளவும் சிந்தித்துப் பார்க்காமல் மாகாண சர்க்கார், டெல்லி வசம் ஒப்புவித்தனர்.

ஒப்புவித்தபோது, மாகாண சர்க்கார் சில வேண்டுகோள்களையும் தெரிவித்துக் கொண்டது, கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்துவிட்டு அதில் ஓரே ஒரு சிறு கீற்றைத் தருவீர்களாஎன்று 'தண்டம்' சமர்ப்பிக்கும் கதையைப் போல!

கல்லூரியில் ஆராய்ச்சிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்தவேண்டும் சந்தனமரம், தேக்கு ஆகியவைகளுக்கு நோய் எப்படி ஏற்படுகிறது, அதைத் தவிர்ப்பது எப்படி என்பது குறித்து அங்கு ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டும்

என்பது போன்றவைகள் தான் அந்த வேண்டுகோள்கள்.

மத்திய சர்க்கார், மாகாணத்தின் காட்டிலாக்கா கல்லூரியைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததும்

(4-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street. Kancheepuram.